# வேலைப்பகுதி என்ஜினியரை இடமாற்றம் செய்ய


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 1
இதழ்: 191
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 6 ஐ: ஆகிர் 8 வெள்ளிக்கிழமை [22-8-69]


## யாழ். மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபை வேலைப்பகுதி என்ஜினீயரான திரு இ. வயித்திலிங்கத்தை உடனடியாக இங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டுமென திரு தா.ச துரைராஜா கொண்டுவந்த தீர்மானம் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணமாநகர சபைக் கூட்டத்தில் சுமார் 5 மணி நேர நீண்ட விவாதத்தின் பின்னர் 13 வாக்குகள் பெற்று நிறைவேறியது. 9 பேர் எந்தப் பக்கமும் வாக்களிக்கவில்லை. ஒருவர் மட்டும் எதிர்த்து வாக்களித்தார்.

புதிய மார்க்கட் கட்டும் விஷயத்தில் என்ஜினியர் நேர்மையீனமாக நடந்ததாகவும், எனவே உடனடியாக இங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டுமென உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையைக் கேட்க வேண்டுமென திரு தா. ச துரைராஜா இப்பிரேரணையில் பேசுகையில் தெரிவித்தார்.

இப்பிரேரணையை திரு வி. சிவசுப்பிரமணியம் ஆமோதித்தார்

என்ஜினியரை இடமாற்றம் செய்யாமல் இதுசம்பந்தமாக ஒரு கமிஷன் நியமித்து விசாரணை நடத்தி தண்டனை கொடுக்க வேண்டுமென சபையில் கொண்டு வரப்பட்ட திருத்தப் பிரேரணை அங்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை

இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, சாதகமாக பின்வருவோர் வாக்களித்தார்கள்.

டாக்டர் ஏபிரகாம், அந்தோனியா சாமிநாதர், எஸ் ஜே அன்ரனி, ஏ போல்ராசா தம்பு கந்தையா, அ நடராஜா, அ விசுவநாதன், ரி கே ராசரத்தினம், என் ரி செல்வத்துரை, ஜே வீரசிங்கம், தா ச துரைராசா, வி சுப்பிரமணியம், என் அந்தோனிப்பிள்ளை.

மேயர் நாகராஜா உட்பட அல்பிரட் துரையப்பா, எம் எஸ் பேரின்பநாயகம் ஏ ஜி. ராஜசூரியர், கா ச நடராஜா, என் மார்க்கண்டு கே வி தெய்வேந்திரம், ஜனுப் பஸீர் ஜனுப் காதர் ஆகிய 9 பேரும் எந்தப்பக்கமும் வாக்களிக்காது நடுநிலைமை வகித்தனர்.

உதவிமேயர் திரு ஆ துரைராசசிங்கம் எதிர்த்து வாக்களித்தார்,

என்ஜினியர் வயித்திலிங்கமே இடமாற்றம் பெறும் வரை தொடர்ந்து மார்க்கட் வேலைகளைக் கவனிப்பார் என்றுமேயர் திரு எஸ். நாகராசா தெரிவித்தார்,

யாழ்ப்பாணத்தை ஆங்கிலத்திலும் 'ஜப்ன' என்று அழைக்காமல் யாழ்ப்பாணம் என்றேஎழுத வேண்டுமென்றும் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கொண்டுவந்த பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (கா, நி)

## 3 மந்திரிகள் ராஜினமா

கல்கத்தா, ஆகஸ்ட் 21

மேற்கு வங்க மந்திரிகள் மூவர் இன்று தமது ராஜினமாக்களைச் சமர்ப்பித்துள்ளனர். இவர் எந்த சபையிலும் அங்கம் வகிக்காதவர்கள். இவர்களுடைய காலம் ஞாயிற்றுக் கிழமையுடன் முடிவடைவதாலேயே ராஜினமாச் செய்துள்ளனர்.

## டட்லி வாழ்த்து

கோட்டை, வியாழன்

இந்திய ஜனதிபதியாக தெரிவு செய்யப்பட்ட திரு. வீ.வி கிரியைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியொன்றை நமது பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா அனுப்பி வைத்துள்ளார்.

''இலங்கையுடன் தாங்கள் வைத்திருந்த நெருங்கிய தொடர்பு இந்திய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து மேலும் வலுவடைய வேண்டும்'' என்று திரு டட்லி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## 11 ஆயிரம் ஏக்கர் நிலம்

கோட்டை, வியாழன்

பதினோராயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயப்படை வீரர்கள் விவசாயம் செய்ய கூடிய நிலங்களாகத் திருத்தி அமைத்துள்ளனர். இதன் மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை காணி நீர்ப்பாசன மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி காப்

## நான் ஏன்விலகவேண்டும்?'

### நிஜலிங்கப்பா கேட்கிறர்

புதுடில்லி, ஆக. 21

'காங்கிரஸ் வேட்பாளர் திரு. சஞ்சீவரெட்டி ஜனதிபதி தேர்தலில் தோற்றதனல் தாங்கள் தங்கள் தலைமைப் பதவியை ராஜினமா செய்வீர்களா?' என்று இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு நிஜலிங்கப்பாவிடம் நிருபர்கள் கேட்டதற்கு 'நான் ஏன் அதற்காக பதவியிலிருந்து விலக வேண்டும்' என்று அவர் பதில் கூறினர்

'காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்காமல் திரு கிரியை ஆதரித்ததற்காக பிரதமர் இந்திரா மீதும் மற்றும் இரு அமைச்சர்கள்மீதும் ஒழுங்கு நடவடிக்கைமேற்கொள்ளப் படுமென்றும் திரு. நிஜலிங்கப்பா சொன்னர்

நாளையோ மறுநாளோ காங்கிரஸ் செயற்கமிட்டி கூடி ஜனதிபதி தேர்தல் சம்பந்தமாக ஆராயவிருப்பதாகவும் அவர் தகவல்தெரிவித்தார்,

## போராட்டத்தை கைவிடும்படி ம. பொ. சி.யிடம் கருணநிதி

சென்னை, ஆகஸ்ட் 21

மாநில சுயாட்சிப் போராட்டத்தைக் கைவிடுமாறு ம. பொ. சிவஞானத்தை முதல் அமைச்சர் திரு. கருணநிதி கேட்டுக்கொண்டுள்ளார் இதுசம்பந்தமாக சுதந்திராக்கட்சி, வலது கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்

தியகட்டுரை வாயிலாக அறியமுடியும் என்றர்.

அவர் மேலும் கூறியதாவது:

நமக்கு தேவையான அதிகாரங்கள் எவை, எவையென்று திட்டவட்டமாக வரையறுத்துதெளிவுபடுத்தி கொள்ள வேண்டுமென்று,

## மே. வங்கத்தில் விடுமுறை — கேரள சட்டசபையில் குதூகலம்

# கிரியின் இல்லத்துக்கு போய் திருமதி காந்தி பாராட்டினர்

## 'மனப்பூர்வவாழ்த்துக்கள்' — மொரார்ஜி

புதுடில்லி, ஆகஸ்ட் 21

**பாரத ஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் திரு. வராககிரி வெங்கட கிரிக்கு நாடுமுழுவதுமிருந்து பாராட்டுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.**

**பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று காலை திரு. கிரியின் இல்லத்துக்குப்போய் அவருக்குப் பாராட்டுதெரிவித்துக்கொண்டார்.**

முன்னள் துணைப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய், முன்னள் அமைச்சர் திரு. எஸ். கே. பாட்டில் ஆகியவர்களும் பாராட்டுக்கள் அனுப்பியிருக்கிறர்கள்.

திரு. கிரி பாரதத்தின் ஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதை கேரள சட்டசபை இன்று பாராட்டியது. மேற்கு வங்காளத்தில் திரு. கிரியின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக திங்கட்கிழமையை விடுமுறைதினமாக அறிவிக்க மேற்கு வங்க மந்திரி சபை முடிவுசெய்திருக்கிறது.

திரு கிரிக்கு முன்னள் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கடிதம்

தின் கவர்னராக இருந்து மக்களின் மனங்களில் இடம் பெற்ற திரு. கிரி ஜனதிபதி பதவிக்கு ... மகிழ்ச்சிக்குரியது என்று சபாநாயகர் கூறினர்.

களும், மலர்க்கொத்துகளும் கொண்டுவந்து திருமதிகாந்தியிடம் கொடுக்கிறர்கள். மக்களிடம் திருமதி காந்தி கதைத்தபொழுது கரைபுரண்டோடும் இந்த உற்சாக

நெல்லியடி

## மரணச்சடங்குகளில் இனி பறை முழங்காது

### பழைய முறைகளைத் தவிர்க்க முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

மரணச்சடங்குகளில் பறை மேளம் அடிக்கும் முறை நேற்று முதல் நெல்லியடியில் முற்றக ஒழிக்கப்பட்டுள்ளது. இத்தோடு மரண வீடுகளுக்குக் கிரியைகள் செய்யவும், பிரேதம் காவுவதற்கும் கையாளப்பட்டு வந்த கோவிய முறையும் இன்று முதல் அடியோடு ஒழிக்கப்பட்டது.

நெல்லியடியை சேர்ந்த சமாதான நீதவானன திரு. எஸ். எஸ் சபாரத்தினத்தின் மரணச் சடங்கின்போதே இம்முறைகள் முற்றக ஒழிக்கப்பட்டுப் புதிய முறைகள் பூதவுடலைச் சுமந்துசென்றனர்.

இன்று முதல் இப்பகுதியில் நடைபெறும் சகல மரண வைபவங்களுக்கும், ஏனைய கொண்டாட்டங்களுக்கும் குடிமைகள் என்று இருப்பவர்களைக் கூப்பிடுவதில்லைஎன்றும், அப்படியாராவது மீறி நடந்தால் அந்தக் குடும்பத்தை முழு ஊரவர்களும் சேர்ந்து பகிஷ்கரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டு, சகல நெல்லியடி மக்களிடமும் கைச்சாத்தும் வாங்கப்பட்டது.

இனிமேல் படிப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ந்த கோவிய முறையும் இன்று முதல் அடியோடு ஒழிக்கப்பட்டது.

நெல்லியடியை சேர்ந்த சமாதான நீதவானுன திரு. எஸ். எஸ் சபாரத்தினத்தின் மரணச் சடங்கின்போதே இம் முறைகள் முற்றாக ஒழிக்கப்பட்டு புதிய முறைகள் கையாளப் பட்டன.

நெல்லியடியைச் சேர்ந்த பிரமுகர்களும், இளைஞர்களும் மறைந்த திரு. எஸ். எஸ். சபாரத்தினத்தின் ...வது வீடு நடந்தால் அந்தக் குடும்பத்தை முழு ஊரவர்களும் சேர்ந்து பகிஷ்கரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டு, சகல நெல்லியடி மக்களிடமும் கைச்சாத்தும் வாங்கப்பட்டது.

இனிமேல் படிப்படியாக இதே முறைகள் வதிரி, நவிண்டில், கரவெட்டி ஆகிய இடங்களிலும் கையாளப் படுமெனத் தெரியவருகின்றது. (வெள்ள.நி)

# 1-ம் எதிரி கத்தியைக்காட்ட 2-ம் எதிரி தாலியை அறுத்தாராம்

## தாலிக்கொடிஅறுத்தவழக்கில் பெண்சாட்சியம்

வல்வெட்டித்துறை, வியாழன்

''இரண்டாவது எதிரி 'அறடா' என்றுசொல்ல முதலாம் எதிரி எனது தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடினுர்'' என கரணவாய் வடக்கைச் சேர்ந்த தங்கராசா தங்கமணி என்ற பெண் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

இவ்வழக்கில் கரணவாய் வடக்கைச்சேர்ந்த க.விமலன், க கிட்டினன் ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த த. தங்கமணியின் ரூபா 800 பெறுமதியான தாலிக்கொடியை அபகரித்ததாக பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

'சம்பவதினம்மதியானம் 1 மணியளவில் குசினியில் தனிமையாக இருந்தேன். எதிரிகள் இருவரும் என்வருகே வந்தனர். 1-ம் எதிரி எனது தலைமயிரைப் பிடித்தார். 2-ம் எதிரி கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினுர். அந்த நேரம் 2 எதிரி அறடா என்று சொல்ல 1-ம் எதிரி எனது தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடினுர் பொலிசாருக்கும் வாக்குமூலம் கொடுத்தேன்'' எனத் தங்கமணி தமது சாட்சியத்தில் சொன்னுர். மேல்விசாரணை அடுத்த மாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# 'நகை அடைவு பிடிப்பதென்றுல் லைசென்ஸ் பெற வேண்டும்'

## சாட்சிக்கு நீதியரசர் புத்திமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

''லைசென்ஸ் பெற்றுத் தான் நகை அடைவுபிடிக்க வேண்டும். நீர் தொடர்ந்து லைசென்ஸ் இல்லாமல் அடைவு பிடித்து வந்தால் அது உம்மைத் தொந்தரவில் மாட்டிவிடும்.'

கள்ள நோட்டு வழக்கில் சாட்சியமளித்த பாக்கியலட்சுமி என்பவரைப் பார்த்து நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் இவ்வாது தெரிவித்தார்.

தான் நகை அடைவு பிடிப்பதில்லை என்றும் நம்பிக்கைக்குக் காணியும், நகைகளும் வாங்கி வைத்துக் கொண்டு கடன் கொடுப்பதாகவும், கடனைத் திருப்பித்தரும்போது அவர்கள் சந்தோஷமாகக் கொஞ்சம் பணம் கூடுதலாகத் தருவதாகவும் கொட்டடியைச் சேர்ந்த பாக்கியலட்சுமிஎன்பவர் தெரிவித்தார்.

அடைவுபிடிப்பது பற்றித் தமக்குத் தேவையில்லை என்றும், அதுபற்றி இந்த நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படமாட்டாது என்றும் தெரிவித்தபின்னரே மேற்கண்ட புத்திமதியை நீதியரசர் சாட்சிக்குத் தெரிவித்தார். (கா.நி.)

சபை இன்று பாராட்டியது. மேற்கு வங்காளத்தில் திரு. கிரியின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக திங்கட்கிழமையை விடுமுறைதினமாக அறிவிக்க மேற்கு வங்க மந்திரி சபை முடிவுசெய்திருக்கிறது.

திரு கிரிக்கு முன்னுள் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிருர்.

முன்னுள் அமைச்சர் திரு. எஸ். கே. பாட்டில் அனுப்பியிருக்கும் பாராட்டில் இந்த முடிவை தேசம் கௌரவிக்க வேண்டும். தேர்தலுக்கு முன்பும் பின்பும் என்ன கருத்துவேற்றுமைகள் இருந்தபோதிலும் இதனை நாம் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இன்று கேரள சட்டசபை திரு. கிரியின் வெற்றியைப் பாராட்டியது, கேரளத்தின் கவர்னராக இருந்து மக்களின் மனங்களில் இடம் பெற்ற திரு. கிரி ஜனதிபதி பதவிக்கு உயர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்று சபாநாயகர் கூறினுர்.

திரு. கிரியைப் பாராட்டுவதற்காக திருமதி காந்தி அவருடைய இல்லத்துக்கு வந்தபோது திரு, கிரியும் திருமதி சரஸ்வதிபாய் கிரியும் அன்பாக வரவேற்ருர்கள்.

திரு. கிரி வெற்றி பெற்றதையொட்டி திருமதி காந்தியைப் பாராட்டுவதற்காக ஏராளமான மக்கள் திருமதி காந்தியின் வீட்டுக்குப் போய்வந்துகொண்டிருக்கிருர்கள். மலர்ச்செண்டுகளும், மலர்க்கொத்துகளும் கொண்டுவந்து திருமதிகாந்தியிடம் கொடுக்கிருர்கள். மக்களிடம் திருமதி காந்தி கதைத்தபொழுது கரைபுரண்டோடும் இந்த உற்சாகத்தை நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப் பேணும்படிகேட்டுக்கொண்டார்.

... வீரர்கள் விவசாயம் செய்ய கூடிய நிலங்களாகத் திருத்தி அமைத்துள்ளனர். இதன் மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை காணி நீர்ப்பாசன மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி காப்டன் செனிவரத்தின ஆட்சி மன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் இன்று பேசுகையில் வெளியிட்டார்.

# கிரி 24-ம் திகதி பதவி ஏற்பார்

புதுடில்லி, ஆகஸ்ட் 21

திரு. வி. வி. கிரி இம் மாதம் 24-ந் திகதி இந்தியாவில் நான்காவது ஜனதிபதியாகப் பதவி ஏற்றுக்கொள்வார்.

24-ந் திகதி காலையில் திய ஜனதிபதி திரு. கிரியும் தற்காலிக ஜனதிபதி திரு. இதயத்துல்லாவும் ஊர்வலமாக பாராளுமன்றக்கட்டிடத்துக்கு வருவார்கள். இந்த ஊர்வலம் வ( )ம் வழி நெடுகிலும் முப்படையினரும் அணிவகுத்து நின்று மரியாதை செய்வார்கள்.

பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள மத்திய மண்டபத்தில் புதிய ஜனதிபதி பதவி ஏற்றுக்கொள்வார். 31 பீரங்கிக் குண்டுகள் முழங்க புதிய ஜனதிபதி பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வார். பிறகு ஜனதிபதி மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துப்போகப் படுவார்.

# செக் தலைநகரில் இருவர் பலி

பிராக், ஆக, 21

செக்கோஸ்லவாக்கிய தலைநகரான பிராக்கில் இன்று இருவர் கோரமாகப் பலி எடுக்கப்பட்டனர், வார்சோ ஒப்பந்த நாடுகளின் படைகளும் ரஷ்யப் படைகளும் செக்குக்குள் புகுந்து ஆக்கிரமிப்பு மேற்கொண்ட ஓராண்டு தினத்தை நினைவுபடுத்துமுகமாக இன்று செக் மக்கள் பிராக்கில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்,

கட்டிடங்கள் உடைத்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன: கடைகள்சூறையாடப்பட்டன.

பிராக் வானெலியும் பொது இடங்களில் இணைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளும் இன்று இருவர் கோரமாகப் பலி எடுக்கப்பட்ட செய்தியை ஒலிபரப்பின. இன்று பிராக்கில் 320 பேர் கைது செய்யப்பட்டனர்:

# ஏற்றுமதி இறக்குமதியை அரசுபொறுப்பேற்கும்

**புதுடில்லி ஆக-21**

**கைத்தொழில் மூலப் பொருட்களின் ஏற்றுமதியையும் இறக்குமதியையும் இந்திய அரசாங்கம்பொறுப்பேற்று நடாத்த விருக்கிறது.**

கொள்கையளவில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இன்று வெளி வர்த்தக மந்திரி திரு பி ஆர், பகத் தகவல் தெரிவிக்கையில் அரசோ அன்றி அரசு நிறுவனங்களோ கைத்தொழில் மூலப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதிகளை ஏற்று நடாத்தவிருப்பதாகவும், இது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசியலொத்தர் சபையின் 260-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள்வருமாறு:

**1 வது பரிசு**

10 Z 0102 1,00,000-00

**-வது பரிசு**

06 H 0507 40,000-00

**3-வது பரிசு**

42 H 0039 10,000-00

ரூ 537-60 சகம் ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 13 A 0045 | 17 A 0443 |
| 22 A 0989 | 19 A 0025 |
| 23 A 0337 | 05 A 0102 |
| 41 A 0711 | 30 A 0427 |
| 34 B 0797 | 01 B 0528 |
| 32 C 0577 | 04 C 0182 |
| 26 D 0790 | 23 D 0382 |
| 03 D 0944 | 05 E 0857 |
| 34 B 0690 | 10 E 0671 |
| 39 E 0083 | 24 E 0826 |
| 23 E 0681 | 41 E 0793 |
| 01 F 0553 | 24 F 0362 |
| 04 G 0461 | 11 G 0706 |
| 23 G 0459 | 18 H 0232 |
| 22 H 0380 | 18 H 0399 |
| 08 H 0654 | 20 H 0472 |
| 17 H 0729 | 24 J 0044 |
| 25 J 0725 | 31 J 0185 |
| 07 K 0095 | 09 K 0836 |

| | |
|---|---|
| 37 K 0648 | 24 K 0656 |
| 43 K 0267 | 13 K 0176 |
| 41 K 0001 | 04 L 0833 |
| 22 L 0752 | 20 L 0052 |
| 16 M 0153 | 13 N 0301 |
| 08 N 0095 | 01 Z 0376 |
| 12 O 0160 | 11 O 0010 |
| 36 O 0560 | 07 O 0480 |
| 18 O 0841 | 14 P 0206 |
| 34 Q 0124 | 16 R 0076 |
| 41 R 0396 | 29 R 0632 |
| 27 R 0351 | 33 S 0121 |
| 16 S 0618 | 16 S 0849 |
| 13 S 0247 | 23 T 0399 |
| 01 T 0588 | 01 T 0548 |
| 20 T 0112 | 25 T 0269 |
| 12 T 0233 | 09 T 0913 |
| 12 U 0622 | 13 U 0689 |
| 21 U 0263 | 20 V 0813 |
| 09 V 0939 | 42 V 0687 |
| 30 W 0316 | 20 W 0361 |
| 21 W 0305 | 23 X 0692 |
| 04 X 0003 | 12 X 0800 |
| 30 X 0750 | 02 X 0484 |
| 02 X 0295 | 11 X 0876 |
| 41 Y 0625 | 06 Y 0940 |
| 29 Y 0416 | 31 Y 0992 |
| 05 Y 0148 | 04 Y 0130 |
| 41 Y 0243 | 38 Y 0342 |
| 05 Z 0645 | 34 Z 0480 |
| 23 Z 0848 | 13 Z 0479 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

சென்னை, ஆகஸ்ட் 21

மாநில சுயாட்சிப் போராட்டத்தைக் கைவிடுமாறு ம. பொ. சிவஞானத்தை முதல் அமைச்சர் திரு. கருணநிதி கேட்டுக்கொண்டுள்ளார் இதுசம்பந்தமாக சுதந்திராக்கட்சி, வலது கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் இருவரும் இரண்டுஒத்திவைப்பு தீர்மானங்களை கொண்டுவந்துள்ளார்கள்.

சுதந்திராக்கட்சி அங்கத்தவர் திரு. சிமைச்சாமி கொண்டுவந்திருந்த பிரேரணையில், திரு. ம. பொ. சி மாநிலசுயாட்சி போராட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஒருநாள் மட்டும்நடாத்துவதாக அறிவித்திருந்தார். இப்போது சென்னையில் மட்டும் நடத்துவதாக கூறியுள்ளார். இதற்கு தமிழ்நாடு அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்

இதற்கு முதலமைச்சர் பதிலளித்துப் பேசுகையில், ஆளும் கட்சியான தி மு கழகம் மத்திய அரசிடம் இருந்து அதிக நிதிபெற்று மாநிலம் அதிக சுயாட்சியுடன்நடக்க பெரிதும்விரும்புவதாகவும், இதை அண்ணு கூட இறப்பதற்கு முன்னர் மாநில சுயாட்சிபற்றி எழுதிய கட்டுரை வாயிலாக அறியமுடியும் என்ருர்.

அவர் மேலும் கூறியதாவது:

நமக்கு தேவையான அதிகாரங்கள் எவை, எவையென்று திட்டவட்டமாக வரையறுத்துதெளிவுபடுத்திகொள்ள வேண்டுமென்று, ஒரு நிபுணர் குழுவை அமைக்க தீர்மானித்து இருப்பதாக நான் அறிவித்தேன். அது சம்பந்தமாக மூவர் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதில் ராஜமன்னர் தலைவராகவும், ஏ. எல் முதலியார், சந்திராரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டு இருக்கிருர்கள். இந்த குழு மத்

(4-ம் பக்கம்பார்க்க)

# மசூதியில் தீ

ஜெருசலம், ஆகஸ்ட் 21

பழமையும், புராதனசிறப்புமிக்க முஸ்லிம்களின் மசூதி ஒன்று ஜெருசலத்தில் பெரும் தீயொன்றினுல் முற்ருக அழிந்து போய் விட்டது.

1300 ஆண்டு சிறப்புமிக்க இந்த மசூதியில் பிடித்ததீயை தீயணைக்கும் படைகள் அணைக்க முயன்றும் முடியாமல் போய் விட்டதாம்.

# கிரியின் வெற்றிக்கு இங்கும் பாராட்டு

கொழும்பு, வியாழன்

'கிரியின் வெற்றி முற்போக்கு வாதிகளின் வெற்றி' என்று திரு மைத்திரிபால சேனநாயகா இன்று ஆட்சி மன்றத்தில் இந்திய ஜனதிபதியாக திரு கிரி தெரிவு செய்யப்பட்டது குறித்துப் பேசுகையில் தெரிவித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த திருமதி சிவா ஒபயசேகரா பேசுகையில் 'இந்நாட்டில் பதினேழு பதினெட்டு அமைச்சர்கள் செய்யமுடியாத காரியத்தை தனித்துநின்று இந்திராசாதித்துவிட்டார்' என்று கூறினுர்

கைத்தொழில் அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன பேசுகையில், இந்தியாவில் திரு கிரி வெற்றி பெற்றதை இங்குள்ளவர்கள் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளப் பார்க்கிருர்களென்றும், இந்திரா இங்குள்ளவர்கள் போல் நிலப்பிரபுத்துவர் அல்லர் என்று கூறினுர் கிரியின் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி என்றும் தாம் இவ் வெற்றியை வரவேற்பதாகவும் கூறினுர்.

**வடபகுதி அசைஸ் விசாரணை**

# கள்ள நோட்டு வழக்கில் எதிரி விடுதலை!

யாழ்ப்பாணம், வெள்ளி

கள்ளநோட்டு வழக்கின் எதிரி ஒருவர் ஜூரி சபையினர் ஏகமனதான முடிவுக்கிணங்க அசைஸ் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தால் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.

இவ் வழக்கு நேற்று வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டது. 1968 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதியளவில் நூறு ரூபா கள்ள நோட்டுக்கள் ஐந்துவைத்திருந்ததாகவும், எஸ். சிவகெங்கை என்பவரிடம் அவற்றைக் கொடுத்து உண்மையானவையென்று சொல்லிப் பாவித்ததாவும் செல்லையா சிவகுரு மீது இவ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

சின்னத்துரைசிவகெங்கை, பாக்கியலட்சுமி, சண்முகராஜா முத்துலிங்கம், இராஜரத்தினம், இன்ஸ்பெக்டர் டயஸ், சப் இன்ஸ்பெக்டர் முஸாபர் ஆகியோர் சாட்சியமளித்தபின் எதிரி சுற்றவாளி என ஜூரிசபையினர் ஒரேமனதாக தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரியை நீதியரசர் விடுதலைசெய்தார்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர்கள் ஏ. சம்பந்தர், என். சிவகுமாரன் ஆகியோர் புறக்டர்கள் ஆர். விசுவநாதன், வி. ஈ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார்கள். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் பிரியாந்த பெரேரா ஆஜரானுர். (கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் பிரபல்யமான வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த கௌண்டர் கிளாக்கும்; ரூபா 5000/- பிணைப்பணம் கட்டக்கூடிய காஷியரும் தேவை. திறமைக்கேற்ற சம்பளமும், பிணைப்பணத்திற்கு நியாயமானவட்டியும் வழங்கப்படும். விபரங்களுடன் விளம்பர இல. 1341, மே/பா; 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 31-8-69 க்கு முன் விண்ணப்பிக்கவும். 1341

### கல்வி

சிங்களம் (6 மாதத்தில் 5-ம் வகுப்பு தராதரம்) றேடியோ, மின்சார வேலைகள் கற்க, யாழ்ப்பாண தொழில்நுட்ப பாடசாலை, 438, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (இராசாவின் தோட்டசந்திக்குக் கிழக்கே) காலை, மாலை வகுப்புகள். 1340

### விற்பனைக்கு

இரண்டு பசுக்களும் ஒரு பசுக்கன்றும், ஒரு நாம்பன் கன்றும் விற்பனைக்கு உண்டு. விண்ணப்ப முடிவு திகதி 25-8-69. விபரங்களுக்கு: வ. இ. கூ. பா. உ. பா. சங்கம், 67/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1330

பரந்தனிலிருந்து 8 1/2 மைல் தூரத்தில்பாழடைந்த குளத்தின் கீழ் 32 ஏக்கர் பண்பட்ட உறுதி நெற்காணி விற்பனைக்குண்டு. விரைவில் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். பிரித்தும் விற்கப்படும். விளம்பர இல.1338, C/o 'ஈழநாடு,' யாழ்ப்பாணம். 1338


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 22—8—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30பக்திப்பாடல்கள், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 புல்லாங்குழல், 7-35 பேச்சு, 7-45 ஐக்கியநாடுகள் சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
ரிபோயா, போயா 2-30மணி
எம் ஜி.ஆர்.-பத்மினி
நடித்த
**ராணி சம்யுக்தா**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
**எங்க ஊர் ராஜா**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்
**குழந்தைக்காக**
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

**யாழ் வின்ஸர்**
தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம் ராஜன்,
புஷ்பலதா,


விஞ்ஞான கண்காட்சி போட்டி:

## யாழ். மத்திய கல்லூரிக்கு இரண்டுவெற்றிக்கேடயங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி
கல்வி நூற்றாண்டுத் தினத்தை முன்னிட்டு இம் மாதம் 13-ம் திகதியிலிருந்து 16-ம் திகதிவரை நடைபெற்ற விஞ்ஞானப்பொருட்காட்சிப் போட்டிகளில் இரண்டு வெற்றிக் கேடயங்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சுவீகரித்தது.

இரசாயனப் போட்டியில் யாழ்ப்பாணம் கோலிபமிலி கொன்வென்ட்டுக்கு கேடயம் வழங்கப்பட்டது.

தாவரவியல் போட்டியிலும், டி. என். ஏ. மொடல் போட்டியிலும் யாழ். மத்திய கல்லூரி இரண்டு வெற்றிக் கேடயங்களைப் பெற்றது.

விலங்கியல் போட்டியில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் கேடயத்தைப் பெற்றது

பௌதிகவியல் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி கேடயத்தைப் பெற்றது.

முதலாம், இரண்டாம், மூன்றும், நான்காம் நாள் நிகழ்ச்சிகளை முறையே வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், கல்வி அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. எம்.பாஸ்கரலிங்கம், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. ரி. ரி. ஜெயரட்ணம், மத்திய கல்லூரி அதிபர் ஈ. சபாலிங்கம் ஆகியோர் திறந்துவைத்தனர்.

பரிசளிப்பு வைபவத்துக்கு வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ரி. புத்திரசிங்கம் தலைமைவகித்தார். வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் பரிசில்கள் வழங்கினார். சங்க உபதலைவர் திரு கே. விஸ்வநாதர் நன்றி தெரிவித்துப்பேசினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே டி அருள் பிரகாசம், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. ஜி. என். எட்வர்ட்ஸ், என்ஜினியர் ஈ. வைத்திலிங்கம், வேம்படி அதிபர் செல்வி. எம். தம்பையா, வேலணை மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த எஸ் நாகராசா என்ஜினியர் கே. மகாதேவா ஆகியோர் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

(கா நி)

## யாழ். மாவட்ட தமிழ் தினவிழா போட்டி முடிவுகள்

அளவெட்டி, புதன்
அகில இலங்கைத் தமிழ்த் தின விழாப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி கூடிய ஸ்தானங்களைப் பெற்றது.

பாடசாலை ரீதியாகவும், வட்டாரரீதியாகவும், மாவட்டரீதியாகவும் நடாத்தப்பட்டு, இறுதியில் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தமிழ்த்தின விழாப் போட்டிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மூன்று இடங்களைப் பெற்றது.

யாழ். மாவட்டத்திலிருந்து இப்போட்டியில் கலந்து கொண்ட 20க்கு அதிகமான பாடசாலைகளில் அருணோதயாக்கல்லூரியைச் சேர்ந்த கே. சாந்தவதனி 'பி' பிரிவில் சொற்பொழிவில் முதல் இடத்தையும், 'சி' பிரிவில் செல்வன் ஆ குகானந்தன் சொற்பொழிவில் முதல் இடத்தையும் 'சி' பிரிவில் செல்வி மு. இந்திராணி சொல்வதெழுதலில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

மருதனமடம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த சோ. மைதிலி 'பி' பிரி

## விளையாட்டு விழா

அளவெட்டி, வியாழன்
வலி-வடக்கு (காங்கேசன் துறைப்பகுதி) விளையாட்டுக் கழக சமாஜத்தின் ஆதரவில் விளையாட்டு விழா இம்மாதம் 24 முதல் 31-ம் திகதி வரை நிகழவிருக்கிறது.

## "விளையாட்டு திடலில்மட்டும் காணமுடியும்"

சுழிபுரம், வியாழன்
"விளையாட்டு வீரர்கள் வெற்றி தோல்வியை ஒரு பொருளாகக் கொள்ளாது அங்கு ஏற்படும் கட்டுக்கோப்பு, சகோதரபாசம், நேர்மை ஆகியவற்றையே எடுத்துக் கொள்ள வேண்டும். பல்வேறு வகையானவர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டிகளில், யாவற்றையும் மறந்து ஒரு நோக்குக்காக ஒன்றுபட்டு பாடுபடுவதை விளையாட்டுத் திடலில் அன்றி வேறு எங்கும் காணமுடியாது.

இவ்வாறு வலிகாமம் மேற்கு 2ம் பிரிவு விளையாட்

## 'சைவம் முதன்மையானது'

அளவெட்டி, வியாழன்
"சகல சமயங்களிலும் பெருமைவாய்ந்ததும், தொன்மையானதும் சைவசமயம்தான். இதைமேல் நாட்டில் உள்ள சமயவாதிகள் ஒப்புக்கொண்டு சைவசமயத்தின் தொன்மையை மேலும் ஆராய்ந்து வருகின்றனர் இந்த ஆராய்தலின் முடிவில் உலகில் உள்ளயாவரும் சைவ சமயத்தின் தொன்மையை உணர்ந்தால் சைவம் முன்இருந்தநிலையை கட்டாயம் அடையும்"


இவ்வாறு குப்பிளான் கற்கரைப் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவ ஆரம்ப நாளன்று சொற்பொழிவு ஆற்றுகையில் ஆசிரியர் திரு. விநாயகமூர்த்தி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், உலகில் உள்ள வேற்றுமொழி அறிஞர்கள் எமது சைவசமயத்தின் தொன்மையை உணர்ந்து எமது சமய அடிப்படைக் கொள்கையை அறிய ஆவல் கொண்டிருக்கும் வேளையில் எமது சமயத்தில் பிறந்து வளர்ந்தோர் சைவசமய அடிப்படைக் கொள்கைப்படி நடக்காமல் இருப்பது வெட்கக் கேடான செயல் என்றார். திரு. கதிரவேலுவும் பேசினார்.

## 'கடவுளே தூண்டச் செய்கிறார்'

அல்லைப்பிட்டி, வியாழன்
"எந்த ஒரு செயலையும் நாம் நினைத்தபடி செய்ய முடியாது. அதற்கு ஆண்டவனின் அனுக்கிரகம் கிட்டவேண்டும். ஆண்டவனை நினையாமல் செய்யும் எந்த ஒரு காரியமும் முற்றுப் பெறுவதில்லை. கடவுளுக்கு மரத்தினால் தேர்செய்வது பெரிய செயலல்ல. ஆனால் கடவுள்தான் எம்மை செய்யும்படி தூண்டுகின்றார் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்" என திருக்கோணமலை உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். சிவஞானம் வேலணைபெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சிற்பத் தேர் செய்வதற்கான திருப்பணியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சொ. விநாயகலிங்கம் தலைமையில் இவ்வாரம்ப விழா நடைபெற்றது. முதன் முதலாக திருப்பணி நிதியினை திருமலை உதவி அரசாங்க அதிபரிடம் முன்னாற் வேல



'புறாக்பொண்ட்' கோரு தூள் தேயிலைப் போட்டிக்கு வந்துகுவிந்துகொண்டிருக்கும் கூப்பன்களை புறாகபொண்ட் (சிலோன்) லிமிட்டெட்டின் துணைத் தலைவர் திரு. ஜயலிங்கம், விற்பனை முகாமையாளர் திரு. ரி தயா டி லிவேரா ஆகியவர்களும் ஸெனித் விளம்பர நிறுவனத்தின் கணக்கு நிர்வாகி திரு. எஃப். கே. டீனும் அவரது மனைவியும் பரிசீலனை செய்துகொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். 7-10 69-ல் இப்போட்டி முடிவடைகின்றது.

## கூட்டுத்தாபனம் சுறுசுறுப்பு

தாளையடியில் புதிதாக அமைக்கப்பெற்ற இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினர், இப்பகுதியின் மீன்பிடியாளரிடம் மீன்களைக் கூடுதலாக வாங்குகின்றனர். மீன்களை அவ்வப்பகுதிகளுக்குச் சென்று எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் ஒரு புதிய ஜீப்வண்டியையும் வழங்கியுள்ளது.

## புதிய வீதி

பச்சிலைப்பள்ளி, வியாழன்
முள்ளிப்பற்றுக் கிராமசபை, கட்டைக்காடு, முள்ளியான் ஆஸ்பத்திரி, வண்ணான்குளம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கிணறுகளைக் கட்ட தீர்மானித்திருக்கிறது.

கட்டைக்காடு கோயில் வீதி, வெற்றிலைக்கேணி கோயில் வீதி அமைப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

## இரத்த தானம்

பண்டத்தரிப்பு வியாழன்
பண்டத்தரிப்பு வலி-மேற்கு காரியாதிகாரிப் பிரிவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்தம் சேகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இரத்தம் கொடுக்கக்கூடியவர்களை காரியாதிகாரி கந்தோருக்கு அனுப்பிவைக்கும்படி காரியாதிகாரி சகல கிராமசேவையாளர்களையும் கேட்டுள்ளார். இரத்த தானம் செய்பவர்களுக்கு ரூபா.10 சன்மானமாகவழங்கப்படவிருக்கிறது. 21 ம் திகதி இரத்ததானம் நடைபெறும்.

## 10ம் ஆண்டுவிழா

பண்டத்தரிப்பு வியாழன்
இளவாலை மாரீசன் கூடல் புனித கயித்தார் சனசமூக நிலைய 10 வது ஆண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உதவி அரசாங்க அதிபர், வலி-மேற்குக் காரியாதிகாரி திரு. நடராசா ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.


**நீங்கள் பேச்சாளராக வேண்டுமா?**

- குறைந்த செலவில் அதிக பயன் பெறலாம்.
- அண்ணா சொற்பயிற்சி மன்றத்தில் உறுப்பினராகி விடுங்கள்.
- அடுத்த வகுப்பு 26-8-69 காலை 9-00 மணிக்கு நடைபெறும்.
- விபரங்களுக்கு எழுதுங்கள்.

**அண்ணா சொற்பயிற்சி மன்றம்**
330, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**அது நல்லது அது இதமானது**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவில் முதல் இடத்தையும் 'சி' பிரிவில் செல்வி மு. இந்திராணி சொல்வதெழுதலில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

மருதனமடம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த சோ. மைதிலி 'பி' பிரிவிலும், செல்வி சி.சிவசத்தி 'சி' பிரிவிலும் பா ஓதலில் முதலிடம் பெற்றனர்.

'ஏ' பிரிவில் உரத்துவாசித்தலில் நடேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த ஏ. இராஜசுலோசனவும், உறுப்பெழுத்தில் இளவாலை கன்னியர் பாடசாலையைச் சேர்ந்த மேரி ஆனும், பா ஓதலில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சோந்த த. அகல்யாவும் முதலிடம் பெற்றனர்.

'பி' பிரிவில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த சி. குமாரகுலசிங்கம் உறுப்பெழுத்தில் இரண்டாம் இடத்தையும், உரத்து வாசித்தலில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க. முருகேஸ் லதா மூன்றும் இடத்தையும், நாடகப் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி முதல் இடத்தையும் பெற்றன.

'சி' பிரிவில் யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். சிவகுமார், உறுப்பெழுத்தில் மூன்றும் இடத்தையும், சந்திரபுரம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ப. சந்திராதேவி உரத்து வாசித்தலில் இரண்டாம் இடத்தையும், இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் நாடகம் முதலாம்இடத்தையும் பெற்றன.

கள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டிகளில், யாவற்றையும் மறந்து ஒரு நோக்குக்காக ஒன்று பட்டு பாடுபடுவதை விளையாட்டுத் திடலில் அன்றி வேறு எங்கும் காணமுடியாது.''

இவ்வாறு வலிகாமம் மேற்கு 2ம் பிரிவு விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்புரை யாற்றிய வடமாகாண அரசாங்க அதிபர் எவ்.சி. பீட்டர்ஸ் குறிப்பிட்டார்.

திரு.எஸ். நிற்சிங்கம்தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வட்டுக்கோட்டைஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ.

யில் குறிப்பிட்டார்.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சொ. விநாயகலிங்கம் தலைமையில் இவ்வாரம்ப விழா நடைபெற்றது. முதன் முதலாகதிருப்பணி நிதியினை திருமலை உதவி அரசாங்க அதிபரிடம் முன்னாற் வேலணைக் கிராமசபைத்தலைவர் திரு. பு. சுப்பிரமணியன் வழங்கினர். திரு. மாணிக்கவாசம் நன்றியுரை கூறினர்.

அமிர்தலிங்கம் வலி மேற்கு காரியாதிகாரி என். மாணிக்கநடராசா, திரு. கே. அரிச்சந்திரா ஆகியோரும் பேசினர்.

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

ஆவணி மாதம் 6ந் திகதி (22-8-69)

**மேஷம்**- பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். சிறிய விடயத்துக்குக்கூடக் குறைகேட்க நேரிடும். கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும். துயர்படிந்த தினம்.

**ரிஷபம்**- கவர்ச்சிப்பொருட்களைச் சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். கலைஞர்களுக்குப் புதிய சிந்தனைகள் உருவாகும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் சுமுகமாக இருக்கும். இன்று சுபதினம்.

**மிதுனம்**- ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். பூமிப்பிணக்கால் நஷ்டத்துக்கு இடமுண்டு சிலர் உஷ்ண ரோகங்களுக்கும் இலக்காகலாம். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

**கடகம்**- பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள். பொதுத்துறையில் அதிக புகழ் கிடைக்கும். சிலருக்கு அரசியலிலும் அதிக ஆர்வம் பிறக்கலாம். மகிழ்ச்சியான தினம்.

**சிம்மம்**- தொழில்பகுதியில் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கலாம். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பமுண்டு. சிலருக்குத் திடீர் இலாபங்களுக்கும் இடமேற்படமுடியும்.

**கன்னி**- செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலும் விருத்தியுண்டு. உடன் பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவமும் இடம் பெறலாம். தகுதியிலும் உயர்வுக்கு இடமுண்டு.

**துலாம்**- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும், தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும். அதிக சிந்தனையில் ஈடுபடுவீர்கள். கொடுக்கல்வாங்கல் மூலம் பண நெருக்கடி ஏற்படமுடியும்.

**விருச்சிகம்**- பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத் தரும். பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிது புயல் வீசலாம். வெளியிடத் தொடர்புகளில் அமைதிவேண்டும்.

**தனுசு**- சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக்கொள்ளுவீர்கள். இல்லறத்தில் அமைதி நிலவும். பூமியால் இலாபமுண்டு. பேச்சுவார்த்தைகள் இன்று நல்ல பலனை அளிக்கும்.

**மகரம்**- வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆராரக் குறைவுக்கும் இடமுண்டு. சகோதரி ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனையைத் தரும். உள்வீட்டிலேயேஉபத்திரவங்கள் உருவாகும். அமைதிவேண்டும்.

**கும்பம்**- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம், அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவழி நாட்டமுண்டு.

**மீனம்**- இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்குப் புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக் கலைஞர்களுக்கும் நற்புகழ் உண்டு. பொன்னான தினம்.


யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்



ஏ. வி. எம் ராஜன், புஷ்பலதா, சிவகுமார், கீதாஞ்சலி, நாகேஷ், அஞ்சலிதேவி நடித்த

பால்குடம்

அந்துடன் விண்வெளிக்கலம் அப்பல்லோ - 10ன் பயணக் காட்சி 10 நிமிடங்களுக்கு காண்பிக்கப்படும்.

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன் நடித்த

கணவன்

இசை: எம் எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன்: ப நீலகண்டன்

இன்று மட்டும்
வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ராஜன் - புஷ்பலதா நடித்த
கற்பூரம்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Stephen Boyd
Raquel Welch
in
FANTASTIC VOYAGE

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45
Poya, Pre-Poya 4 Shows
7 WINCHESTER
FOR
A MASSCRE
(Color & Scope)

அது நல்லது
அது இதமானது




அதுவே
ஸ்போர்ட்ஸ்மன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனதிபதி வி. வி. கிரிக்கு பூரண ஒத்துழைப்பும் மரியாதையும் கிடைக்கும்

## இந்திய தலைவர்கள் உறுதி

புதுடில்லி, ஆகஸ்ட் 21

**இந்திய ஜனதிபதியாக திரு. வி. வி. கிரி தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து அவருக்குப் பல்வேறு தலைவர்கள், பிரமுகர்களிடமிருந்து வாழ்த்துச்செய்திகள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.**

திரு. கிரியின் வெற்றி வெளியானவுடன் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்ட ஓர் அறிக்கையில் திரு. கிரி தனிச்சிறப்புகள் கொண்ட ஒரு பிரமுகர் என்று பாராட்டியிருக்கிறார். திருமதி காந்தி, திரு. கிரிக்கு அனுப்பிவைத்த ஒரு பாராட்டுக் கடிதத்தில், தம்சார்பிலும் அரசாங்கத்தின் சார்பிலும் பூரண ஒத்துழைப்புத் தரப்படும் என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் ஒருமைப்பாட்டுக்காக உழைக்கப்போவதாகவும் திருமதி காந்தி நிருபர்களிடம் கூறினர்.

## கிரியின் வீட்டுக்குமுன் மக்கள் கூட்டம்

நேற்றிரவு சுமார் 10-30 மணியளவில் திரு. கிரி வெற்றிபெற்ற செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவர் தமது வீட்டுக்குள்ளிருந்தார். நூற்றுக்கணக்கான மக்கள் முடிவுகள் அறிவிக்கப்படுமுன்னரே அவர் வீட்டின் முன் கூடியிருந்தார்கள். செய்தி கிடைத்ததும் மக்கள் ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். தங்களின் புதிய ஜனதிபதியைப் பார்க்க விரும்புவதாக அவர்கள் கோஷமிட்டார்கள்.

## கிருஷ்ணமேனன் முதலில் வாழ்த்தினர்

திரு. கிரி வெற்றி பெற்றதைப் பாராட்டுவதற்காக அவர் இல்லத்தில் நேற்று இரவே பல பிரமுகர்கள் அவரைச் சந்தித்து வாழ்த்துக்கூறினர்கள். அவர்களில் முதலில் வாழ்த்துக்கூறியவர்களில் முன்னாள் அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ண மனனும் ஒருவர். நிருபர்கள் பலர் அவரைச் சந்தித்துப் பேட்டி எடுத்தார்கள். அவருக்கு ஏராளமானவர்கள் மலர்மாலைகள் அணிவித்தார்கள்

இந்த வெற்றியைத் தமது தனிப்பட்ட வெற்றியாகத் தாம் கருதவில்லை என்றும் நாம் பேணிக்காத்துவரும் ஜனநாயக மரபுகளின் வெற்றியாகத் தாம் கருதுவதாகவும் திரு. கிரி கூறினர். முழு அடக்கத்துடன் இதனைத் தாம் ஏற்றுக் கொள்வதாகக் கூறிய திரு. கிரி. தமது வெற்றிக்குக் காரணமாகவிருந்த மக்கள் பிரதிநிதிகளான வாக்காளர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டார்

## நிஜலிங்கப்பா பாராட்டினர்

திரு. கிரி வெற்றிபெற்றதைக் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா பாராட்டினர். திரு. கிரிக்கு எல்லோரது மரியாதையும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் தமக்கு நம்பிக்கையுண்டு என்று அவர் கூறினர்.

தேர்தல் முடிவுகள் என்னவாய் இருந்தபோதிலும் கட்சியின் ஒழுங்கு நெறிகள் பராமரிக்கப்படவேண்டும் என்று திரு. நிஜலிங்கப்பா வலியுறுத்தினர். நாளைய தினமும் நாளை மறுதினமும் காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடி ஜனதிபதி தேர்தல் சம்பந்தமாகவும், திருமதி இந்திரா காந்தி மற்றும் இரு மந்திரிகள் ஆகியவர்களுக்கும் தாம் அனுப்பியுள்ள கடிதங்கள் பற்றியும் ஆராயும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### தேஷ்முக் கருத்து

ஜனதிபதி தேர்தலில் சுதந்திரா கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. தேஷ்முக் தேர்தல் முடிவுகள்பற்றி கருத்து வெளியிடுகையில் இந்த முடிவை எல்லாரும் மதிக்கவேண்டும் என்றார்.

### ஜனசங்

ஜனசங் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு.

... தல் மக்களின் மனங்களில் எப்பொழுதும் நீங்காமல் இருக்கும் என்றார்

பாரதீயகிராந்திதளத்தின் தலைவர் கருத்து வெளியிடுகையில், நாட்டின் அரசியலில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்றார்.

### இந்து மாசபை

இந்துமாசபைத் தலைவரும் திரு கிரிக்கு பாராட்டு அனுப்பியிருக்கிறார். ஆந்திர

... வெற்றிபெற்றிருப்பது பாராட்டுக்குரியது என்றார். தி. மு. க. எம். பி.க்களான திரு. அன்பழகனும், மனோகரனும் இந்த வெற்றி முற்போக்கு சக்திகளுக்கு கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்கள்.

### காஷ்மீர் முதல்வர்

ஜம்முகாஷ்மீர் முதல்வர் திரு சாதிக்அலி திரு. கிரி

# இந்திராவின் கொள்கைக்கு மக்கள் தீர்ப்பு கிடைத்துவிட்டது

## நிஜலிங்கப்பா விட்டுகொடுப்பாரா?



இந்திய ஜனதிபதி தேர்தல் முடிந்த சூட்டோடு இனி அரசியல் வட்டாரங்களில் ஏற்படவிருக்கும் திருப்பங்கள் குறித்து ஆர்வம் காட்டுவதில் அரசியல் அவதானிகளும், பத்திரிகை நிருபர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.



ஜனதிபதி தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரம் பெற்ற வேட்பாளர் தோல்வியுற்றதும், சுயேச்சையாக திருமதி இந்திரா காந்தியின் ஆதரவோடு போட்டியிட்ட திரு. வி. வி. கிரி வெற்றி பெற்றதும் காங்கிரஸில் உள்ள வலதுசாரிகளுக்கும் சிண்டிகேட் குழுவினருக்கும் கவலையளித்திருப்பது ஒரு பக்கமிருக்க



தரவுபிறப்பிக்குமாறு திருமதி காந்தியை வற்புறுத்தினர். பிரதமர் என்றமுறையில் அவர் ஒரு வேண்டுகோளை அல்லது உத்தரவை பிறப்பித்தால் காங்கிரஸ்அங்கத்தவர்கள் அதற்கு மீறிப்போக மாட்டார்கள் என்று கருதப்பட்டது. உறுப்பினர்களின் ஜனநாயக உரிமையில் தாம் தலையிட விரும்பவில்லை



யென்று திருமதி காந்தி மறுத்து விட்டார்.

வற்புறுத்தல் அதிகரித்ததின் பேரில் சுதந்திரமாக வாக்களிக்க விரும்புகிறவர்களுக்கு அந்த உரிமையை வழங்கும்படி திருமதி காந்தியும் திரு நிஜலிங்கப்பாவைக் கேட்டுக் கொண்டார். வங்கி தேச உடைமையாக்கப் பட்டதின் காரணமாக பிரதமமந்திரி

... ஸில் இருந்து வெளியேற்றி விட்டு சுதந்திரா, ஜனசங் கலப்பு அரசாங்கமொன்றை உருவாக்கலாம் என்று அந்தக் கட்சிகளுடன் திரு நிஜலிங்கப்பா பேரம் பேசியதாக கருத்து நிலவத் தொடங்கியது.

## திருமதி காந்தி கட்சியின் தலைவராக வந்தால் . . . .

கட்சியில் உருவாகிய நெருக்கடிகளின் உச்சக்கட்டம் இப்பொழுது புதிய திருப்பம் ஒன்றை அடைந்திருப்பதால் கட்சியின் தலைமைப் பொறுப்பு மாறவேண்டும் என்ற கோரிக்கை வலுவடையக்கூடும் என்று கருதப்படுகின்றது. காங்கிரஸ் வேட்பாளர் தோல்வியடைந்ததைத் தமது தோல்வியாக ஒப்புக்கொண்டு திரு. நிஜலிங்கப்பா பதவியைவிட்டு விலகினாலும் விலகக்கூடும். அப்படியாகும் பட்சத்தில் திருமதி காந்தியின் குழுவினருக்குக் கட்சியின் கடிவாளம் கிடைக்கலாம். அந்த நிலைமையில் திருமதி காந்தியே கட்சியின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டால், வலதுசாரிகளில் பலர் ஒதுங்கிப்போகக்கூடும் அல்லது ஒதுக்கப்படக்கூடும் என்று அரசியல்அவதானிகள் கருதுகின்றனர். கட்சியின் ஒற்றுமைக்காக உழைக்கப்போவதாகவே திருமதி காந்தி கூறியிருக்கிறார்.

### திருநாள்

பச்சிலைப்பள்ளி, வியாழன்

கிளாலியில் தேவமாதா கோயில்திருநாள் 14-ம்திகதி சுற்றுப்பிரகாரத்துடனும் மறுநாட்காலை திவ்விய பாடற்பூசையுடனும் முடிவுற்றது. ஆராதனைகளை வண சி. ஸ்பம்பதி அடிகள் நடத்தி வைத்தார்.

### 'மற்ற மதங்களுக்கு மரியாதை வேண்டும்'

— பிரதமர்

சிலாபம், வியா

'நாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக விருப்பினும் மற்ற மதங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என முனீஸ்வரத்தில் நடைபெறும் திருவிழா ஒன்றில் அமைச்சர்கள் பல

### 2 பாடசாலைக்கு ஓர் அதிபர்

பருத்தித்துறை, வியா.

அச்சுவேலி ஸ்ரீ விபஸ்தி பௌத்த தமிழ்ப் பாடசாலையில் 5ம் வகுப்புக்குக் கீழும் கதிரிப்பாய் பௌத்த தமிழ்ப் பாடசாலையில் 5ம் வகுப்புக்கு மேலும் அடுத்த மாதம் 4ம் திகதி தொடக்கம் வகுப்புகள் நடக்க வேண்டுமெனக் கல்விமாஅதிகாரி திரு. டீ. ஜீ. குலதுங்க உத்தரவிட்டுள்ளார். இது சம்பந்தமாக திரு. குலதுங்கா அடுத்த மாதம் 4ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

இரு பாடசாலைகளுக்கும் ஒரே தலைமையாசிரியர் இருப்பாரென்றும் மேலதிக ஆசிரியர்கள் ஆசிரியர் பற்றாக்குறையாக இருக்கும் பாடசாலைகளுக்கு மாற்றப்

### அங்குரார்ப்பணம்

மல்லாகம், வியாழன்

மல்லாகம் கிராமசபைப் பொதுசன சமூகநிலையங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்தை அடுத்த மாதம் மல்லாகம் கிராமசபை அலுவலகத்தில் நடாத்த கிராம சபைத்தலைவர் திரு. வ. பொன்னம்பலம் ஒழுங்கு செய்துள்ளார்.

### பெண்வழிகாட்டிகள்

புத்தளம், வியாழன்

புத்தள வட்டாரம் நாட்டுப்புறங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 28 ஆசிரியர்கட்கு பெண்வழிகாட்டிகட்குரிய பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. சிலாப வட்டார பிரதம கொமிஷனர் திருமதி ஜூலி பர்ணாந்து சாந்த ஆன்ட்று, வணக்கத்திற்குரிய சிஸ்ட்ரர்மேரி யூஜினது அனுசரணையுடன் வகுப்புக்களை நடத்தினர். புத்தள வட்டாரக் கல்வியதிகாரி திருடீசமரசிங்க, பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டார். 1-ம் படிவம் தேறிய மாணவர்கட்கு ரெண்டவூட் சின்னம்வழங்கப்பட்டது. அன்று பல பாடசாலை வழிகாட்டிகளின் பல்வேறு கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### சொற்பொழிவு

அல்லைப்பிட்டி, வியா.

வேலணை நால்வர் மடத்தில் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 18ம் திகதி தொடக்கம் 28ந் திகதி வரையுள்ள பதினொரு நாட்களிலும் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

### மாணவர் அவதி

புத்தளம், வியா.

காரைதீவு அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கட்டிட வசதியில்லாததால் இங்குள்ள மாணவர்கள் மிகவும் அவதியுறுகின்றனர். அத்துடன் விஞ்ஞானம் படிப்பதற்குரிய வசதிகளோ விளையாட்டு மைதானமோ இங்கு இல்லை என்று புகார் கூறப்படுகிறது.

### கடும் வரட்சி

புத்தளம், வியா.

இப்பகுதியில் கடும்வரட்சி காரணமாகத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்கு உள்ள ஆறு குழங்களிலும் தண்ணீர் வற்றிவிட்டது. உப்பளத்தில் மாத்திரம் வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. கால்நடைகட்குக்குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

போட்டியிட்ட திரு. தேஷ்முக் தேர்தல் முடிவுகள்பற்றி கருத்து வெளியிடுகையில் இந்த முடிவை எல்லாரும் மதிக்கவேண்டும் என்றார்.

### ஜனசங்

ஜனசங் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. வாச்பை மக்களின் ஆதரவு திரு. கிரிக்கு எப்பொழுதும் இருக்கும் என்றார்.

### பிரஜா சோஷலிஸ்ட் கட்சி

பிரஜாசோஷலிஸ்ட் கட்சித் தலைவர் கருத்து வெளியிடுகையில், இந்தத் தேர் ... தலைவர் கருத்து வெளியிடுகையில், நாட்டின் அரசியலில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்றார்.

### இந்து மாசபை

இந்துமாசபைத் தலைவரும் திரு கிரிக்கு பாராட்டு அனுப்பியிருக்கிறார். ஆந்திர முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டியும் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளார்.

### கருணாநிதி கருத்து

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கருத்து வெளியிடுகையில் கட்சி சார்பற்றவரான திரு. வி வி. கிரி ... ரனும் இந்த வெற்றி முற்போக்கு சக்திகளுக்கு கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்கள்.

### காஷ்மீர் முதல்வர்

ஜம்முகாஷ்மீர் முதல்வர் திரு சாதிக்அலி திரு. கிரியின் வெற்றி ஜனநாயக சக்திகளுக்கும் மத சார்பின்மைக்கும் கிடைத்த வெற்றி என்றார்.

### ஜகஜீவன்ராம்

நாட்டுமக்கள் நம்மோடு இருக்கிறார்கள் என்பதற்கு இது அறிகுறி என்றார்.

... சையாக திருமதி இந்திரா காந்தியின் ஆதரவோடு போட்டியிட்ட திரு. வி. வி. கிரி வெற்றி பெற்றதும் காங்கிரஸில் உள்ள வலதுசாரிகளுக்கும் 'சின்டிகேட்' குழுவினருக்கும் கவலையளித்திருப்பது ஒரு பக்கமிருக்க திருமதி காந்தியின் கோஷ்டியினரிடம் தமக்கு தலைகுனியநேரிட்டுவிட்டதேஎன்பதுதான் இவர்களுக்குபெரிதும் கவலையளிப்பதாகும்.

ஜனாதிபதி பதவிக்கு காங்கிரஸின் சார்பில் போட்டியிட திரு. சஞ்சீவரெட்டியைக் காங்கிரஸ் கமிட்டியினர் தேர்ந்தெடுத்த முறை பற்றி ஆரம்பத்திலிருந்தே திருமதி காந்தி அதிருப்தி தெரிவித்திருந்தார். தம்மை ஏற்கனவே கலந்து கொள்ளாமல் திடீரென எடுக்கப்பட்ட முடிவை ஏற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதை அவர் விரும்ப வில்லை. மேலும் பிரதம மந்திரிக்கு கொடுக்கப்பட வேண்டிய உரியமரியாதை கூட இந்த விஷயத்தில் காங்கிரஸ் தலைவர்கள் கொடுக்கவில்லையென்பது திருமதி காந்தியின் கட்சி காங்கிரஸின் முடிவை அவர் ஏற்றுக் கொண்டார் என்றாலும் அவரை ஆதரிப்பவர்கள் என்று கூறப்பட்டசிலர் காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக அறிவித்தது காங்கிரஸ் தலைவர்களுக்கு பிடிக்கவில்லை. திரு. ஆரோ என்ற அங்கத்தவர் பகிரங்கமாகவே தாம் சஞ்சீவரெட்டிக்கு வாக்களிப்போவதில்லையென்றஅறிவித்தார்நிலைமை இப்படியிருக்கும்போது காங்கிரஸ் தலைவர் எதிர்க்கட்சிகளுடன் விசேஷமாக சுதந்திரா, ஜனசங்கட்சி களுடன் ஜனாதிபதி பதவிசம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தியது திருமதி காந்தியை ஆதரித்தவர்களுக்கு பிடிக்கவில்லை. ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு தேடுமுகமாக எல்லா எதிர்க்கட்சிகளுடனுமே தாம்பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக திரு, நிஜலிங்கப்பா அறிவித்திருந்தபோதிலும் இந்தப் பேச்சுவார்த்தைகள் என்ன அடிப்படையில் நடத்தப்பட்டன என்பதற்கு தகுத்த விளக்கம் தருமாறு திரு. ஜகஜீவன்ராமும், பதிருத்ன் அலி அகமத்தும் திரு. நிஜலிங்கப்பாவைக் கேட்டிருந்தார்கள். இதற்கு மீண்டும் முன்போலவே பதிலளித்த திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் எம். பிக்களையும் எம். எல். ஏக்களையும் காங்கிரஸ் வேட்பாளருக்கே வாக்களிக்கும் படி 'கொரடா' உத்தரவு பிறப்பித்தல் அதிகாரத்தின் பேரில் சுதந்திரமாக வாக்களிக்க விரும்புகிறவர்களுக்கு அந்த உரிமையை வழங்கும்படி திருமதி காந்தியும் திரு நிஜலிங்கப்பாவைக் கேட்டுக் கொண்டார். வங்கி தேசஉடைமையாக்கப் பட்டதின் காரணமாக பிரதமமந்திரியையே பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று பகிரங்கமாக பிரசாரம் செய்த சுதந்திரா ஜனசங் கட்சிகளுடன் திரு நிஜலிங்கப்பா பேச்சு வார்த்தைகள் நடத்திய விஷயம் இந்தக்கட்டத்தில் பெரிது படுத்திக் காட்டப்பட்டது. ஜனாதிபதி பதவிக்கு திரு. ரெட்டியைத் தேர்ந்தெடுக்க உதவினல் திருமதி காந்தியின் கோஷ்டியைக் காங்கிர

## தெரிவின் போது ஒதுக்கிவிட்டு ஆதரவுக்கு மட்டும் வந்தனர்

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரைத் தெரிவு செய்யும் போது பிரதம மந்திரியை ஒதுக்கி அவர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் போனவர்கள் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதற்காக மட்டும் பிரதமரின் ஒத்துழைப்பையும், உத்தரவையும் வற்புறுத்திக் கேட்கத் தொடங்கியது திருமதி காந்தியின் குழுவினருக்கு எரிச்சலை மூட்டியது. இந்த நிலைமையில் காங்கிரஸ் தலைவரும் பிரதமமந்திரியும் பல கடிதங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். பிரதமர் திருமதி காந்தி காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக வெளிப்படையாக இறங்கி வேலைசெய்யாது போனாலும் அவருடைய நிலையை உணர்ந்துகொண்ட பலர் அவர் போக்கின்படியே நடந்து கொள்ளத் துணிந்தார்கள். இந்த அடிப்படையிலேயே காங்கிரஸ்கட்சியின் ஏராளமான எம். பி.களும் எம் எல். ஏ.க்களும் திரு. வி. வி. கிரிக்கு வாக்களித்தனர்.

திருமதி இந்திரா காந்தி வெளிப்படையாகவே இறங்கி திரு, வி. வி கிரிக்காக உழைத்திருந்தால் அவர்இன்னும் பெரும்பான்மைவாக்கு பலத்துடன் அமோகவெற்றி பெற்றிருக்கக்கூடும். இந்த முடிவுகளின்படி திருமதி காந்தியின் வங்கி தேசிய மயக்கொள்கைக்கு, நாடு முழுஆதரவு கொடுத்துவிட்டது என்பது வெளிப்படையாகியுள்ளது. மேலும் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்ற மறைமுகமாக வேலைசெய்தவர்களும் இப்பொழுது தம் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டில் பிரதமருக்குஇருக்கும் பெரும்ஆதரவு வெளியாகியுள்ளதால் அவர்மீது நடவடிக்கை எடுப்பது பற்றிய பிரச்னை குறித்தும் திரு. நிஜலிங்கப்பா இப்பொழுது புனர் ஆலோசனை செய்யக்கூடும் என்றாலும், தேர்தல் முடிவுகள் எதுவாய் இருந்தாலும் கட்சியில் ஒழுங்கு இருக்க வேண்டியது அவசியம் என்று திரு. நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார். நாளை கூடும் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் இந்த விஷயம் பெரிதாக ஆலோசிக்கப்படலாம்.

சிலாபம், வியா

'நாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக விருப்பினும் மற்ற மதங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என முனீஸ்வரத்தில் நடைபெறும் திருவிழா ஒன்றில் அமைச்சர்கள் பலரோடு கலந்து கொண்டபடுவ பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அத்திருவிழாவில் குழுமியிருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இச்சிறிய நாடான இலங்கையில் உள்ள நாம் இன, மத ஒருமைப்பாட்டுடன் விளங்கி மற்றநாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் எனப் பிரதமர் மேலும் பேசுகையில் கூறினார்.

## புதிய ஜே. பி.

கங்கேசன்துறை வியாழன்

காங்கேசன்துறைப் பட்டினசபையின் முன்னாள்தலைவர் திரு, ஆ. தெட்சணாமூர்த்தி யாழ்மாவட்டத்தின் புதிய சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

காங்கேசன்துறை கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரானஇவர் பொதுநல சேவையில் ஈடுபாடுடையவர்.

## சங்கடம்

கோப்பாய், வியாழன்

கோப்பாய் யாழ்ப்பாணம் இரட்டைத் தட்டு பஸ் சேவை கடந்த சிலநாட்களாக படுமோசமான நிலையை அடைந்துள்ளது.

பெரும்பாலும்நண்பகலில் ஆஸ்பத்திரி,வேலை ஸ்தாபனங்கள் முதலியவற்றிற்கு செல்லும் பஸ் பிரயாணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். பஸ்கள் பற்றாக்குறையும், குறிப்பிட்ட நேரத்திற்கு பஸ்கள் சேவையிலீடு படாமையுமே இதற்குக் காரணம் எனத்தெரியவருகிறது.

... திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

இரு பாடசாலைகளுக்கும் ஒரே தலைமையாசிரியர் இருப்பாரென்றும் மேலதிக ஆசிரியர்கள் ஆசிரியர் பற்றாக்குறையாக இருக்கும் பாடசாலைகளுக்கு மாற்றப்படுவரென்றும் திரு. குலதுங்க தம்மைப் பேட்டி கண்ட குழுவிடம் தெரிவித்துள்ளாராம். அகில இலங்கை பௌத்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. மு. வைரமுத்து தலைமையிற் சென்ற இத்தூதுகோஷ்டியில் மேற்படி காங்கிரஸ் செயலாளர் திரு. என். சின்னத்துரை கரவெட்டி ஸ்ரீ நாரத பௌத்த பாடசாலை அதிபர் கே. கே. இராசரத்தினம், திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

## புதிய நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி. வியாழன்

வேலணைநாவலர் சனசமூக நிலைய வருடாந்தப்பொதுக் கூட்டம் நிலையத்தில் சி. கந்தவனம் தலைமையில்நடைபெற்றபோது பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கா. கதிர்காமு, துணைத்தலைவர்: அ. அருந்தவநாயகம், செயலாளர்: க. மகாலிங்கம், துணைச்செயலாளர்: பொ. இந்திரன், பொருளாளர்: ஆ. செந்திவடிவேலு, பத்திராதிபர்: ச. சத்தியசீலன். பொ. சண்முகலிங்கம், க. பவநாதன், க. செந்தில்ராசா ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

...ளது. இங்கு உள்ள ஆறு குழங்களிலும் தண்ணீர் வற்றிவிட்டது. உப்பளத்தில் மாத்திரம் வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. கால்நடைகட்குக்குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை.

## கந்தபுராணம்

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் நடைபெற்றுவரும் திருவிழாவை முன்னிட்டு திருவிழா முடியும் வரைக்கும் ''கந்தப்புராணபடிப்பு'' திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஐயர் தலைமையில் படிப்பிக்கப்பட்டு வருகின்றது.

## 'உடனே நடத்துக'

காங்கேசன்துறை, வியாழன்

காங்கேசன்துறைப் பட்டினசபையின் காலஎல்லையை ஒரு வருடகாலத்திற்கு நீடிக்கும்படிபட்டினசபை அங்கத்தவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனை அடுத்து பொதுமக்கள் பொதுத்தேர்தலை உடனடியாக நடாத்தும்படி உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டி, வியாழன்

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர்: சி. கணேசன், தலைவர்; வே. மகேசன், உபதலைவர்: க. தர்மலிங்கம், இணைச்செயலாளர்கள்: செ. விஜயராசா, செ. செல்வநாதன், பொருளாளர்: க. சண்முகலிங்கம்.

பிராக் நகரில்

# ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து செக். மக்கள் ஆர்ப்பாட்டம்

பிராக், ஆகஸ்ட் 21

செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப்புகையைப் பலதடவைகள் பிரயோகித்தார்கள். தண்ணீர் பீச்சான்குழலைக் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்ப்பிரயோகம் செய்தனர். ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர். கவசம் அணிந்த ராணுவமும் நகருக்குள் காவல்புரிய வந்துள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவில் வார்ஸோ ஒப்பந்தநாடுகளின் படைகளும் ரஷ்யப் படைகளும் புகுந்து ஆக்கிரமிப்பு மேற்கொண்ட முதலாவது வருடாந்த தினத்தில் ஆயிரக்கணக்கான செக்மக்கள் பிராக் நகரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். பொலிஸார்மீது கற்களையும் வீசினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் 'டுப்செக்' 'டுப்செக்' என்று கோஷமிட்டார்கள்.

இதற்கிடையில் மாஸ்கோவில் 16 அறிஞர்கள் செக்கோஸ்லாவாக்கியாவுக்குள் ரஷ்யப் படைகள் புகுந்ததைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்,

## ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு பாராட்டு

கொழும்பு, வியா.

''தென் கிழக்காசியாவிலேயே சிறந்த முறையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அப்பல்லோ-11 சந்திர மண்டல யாத்திரையைப்பற்றிய வர்ணனைகளை ஒலிபரப்பி உள்நாட்டிலும், இந்தியாபோன்ற வெளிநாடுகளிலும் பாராட்டுப்பெற்றுள்ளது நமது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்' என்று பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நேற்று ஆட்சிமன்றத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

அப்பல்லோ-11சந்திர மண்டலத்திற்கு சென்றதைப்பற்றிய வர்ணனைகளை மிகச் சிறப்பாகச் செய்துமுடிப்பதில் பங்கு கொண்ட ஆட்சிமன்ற சமகாலப் பேச்சுமொழிபெயர்ப்பாளர்கள் திருவாளர்கள் சுந்தரலிங்கம், ரெறன்ஸ்பெரேரா, செனெட்சபைசமகாலப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் திரு. செ. குமாரசுவாமி ஆகியோரையும் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வெகுவாகப் பாராட்டினார்.

# வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் படைகள்

பெப்பாஸ்ட், ஆகஸ்ட் 21

வட அயர்லாந்தில் குழப்பம் ஏற்பட்ட நகர்களில் பிரிட்டிஷ் துருப்புகள் நிலைகொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் ஐ, நா. வில் பாதுகாப்புச் சபையில் வட அயர்லாந்து பிரச்னை பற்றி ஐரிஸ் கோரிக்கையின் பேரில் விவாதிக்கப்பட்டது.

வட அயர்லாந்தை ஐரிஸ் குடியரசுடன் இணைக்க வேண்டும்என்றும் அங்குள்ள ரோமன் கத்தோலிக்கர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்றும் ஐரிஸ் பிரதிநிதி கேட்டுக்கொண்டார். வட அயர்லாந்தில் ஐ, நா. வின் அமைதிப் படையை நிறுத்தவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். பிரிட்டிஷ் கடைகள் வடஅயர்லாந்தின் அமைதியை நிலைநிறுத்துவதில் ஈடுபட்டிருப்பதால் ஐ. நா. படை தேவைப்படாது என்று பிரிட்டிஷ் பிரதிநிதி கூறினார்.

## மார்பு நிலைய வேலை துரிதம்

காங்கேசன்துறை, வியாழன்

மயிலிட்டி மார்பு நிலைய ஆஸ்பத்திரிவேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. சென்ற வருடம் சுகாதார அமைச்சரால் அத்திபாரம் நாட்டப்பட்ட இருவார்ட்டுகளுக்கான கட்டடவேலை. நவீன முறையில் கட்டப்பட்டுவரும் இருவார்ட்டுகளின் வேலை முடிவுற்றதும் காசநோயாளர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

தமிழ்நாடு மேல் சபையில்

# ஹரிஜனமக்களுக்காக குன்றக்குடிஅடிகளின் பரிவு

சென்னை, ஆக. 21

குன்றக்குடி அடிகள் தமிழ்நாடு மேல்சட்டசபையில் நிகழ்த்திய தமது 'கன்னிப்' பேச்சின் போது தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஹரிஜன காலனிகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

'காந்தி நூற்றாண்டு விழா ஆண்டான இந்த ஆண்டில் எல்லா ஹரிஜன காலனிகளுக்கும் மின்சார வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து எல்லா கிராம பஞ்சாயத்துகளுக்கும் அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

துண்டு நிலங்களின் சொந்தக்காரர்களின் வசதிக்காக கூட்டுறவு நீர்ப்பாசன திட்டம் ஒன்றை மின்சார இலாகாவும் கூட்டுறவு இலாகாவும் சேர்ந்து தயாரித்து அமுல் நடத்த வேண்டும் என்று அடிகளார் குறிப்பிட்டார்.

மின்சார போர்டின் நிதி நிலையைச் சரிப்படுத்த விவசாய வருமானவரி, வருமானவரி கட்டுபவர்களிடம் அவர்களுக்கு மின்சார இணைப்பு தரும்போது அதற்கான செலவை முற்றாணமாக வசூலிக்கலாம்.

தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'தெய்வீக அறிவைப் புத்தகங்களிலிருந்து டன் வாங்க முடியாது.' —மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 6-ந் திகதி (22-8-69)

## நாடும் கட்சியும்

கட்சி பெரிதா, நாடும், நாட்டு மக்களின் வாழ்வும் முன்னேற்றமும் பெரிதா? இந்தக் கேள்விக்குத்தான் இந்தியக் குடியரசின் ஜனாதிபதி தேர்தல் முடிவு தெரிவித்திருக்கிறது. இது இந்திய நாட்டின் உள்நாட்டு அரசியல் விஷயம் ஆனாலும் வெளிநாடுகளுக்கும் இதில் அக்கறை உண்டு. கட்சியும் நாடும் சம்பந்தப்பட்ட இந்திய ஜனாதிபதி தேர்தலின் முடிவிலிருந்து இலங்கையும் படித்துக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள.

இந்தியக் குடியரசின் மூன்றாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த டாக்டர் ஸாகீர் ஹுசெயின் காலமானதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிந்தெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஜனாதிபதி ஒருவர் தமது பதவிக்காலம் முடிந்து மீண்டும் தேர்தலில் போட்டியிட மறுத்துவந்த பட்சத்தில் உதவி ஜனாதிபதியாகப் பதவி வகித்துவந்தவரையே ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகராக நிறுத்துவது ஆளும் கட்சியாக இருந்துவரும் இந்திய தேசிய காங்கிரஸின் மரபாக இதுவரை இருந்து வந்தது. இம்முறை என்ன காரணத்தினாலோ உதவி ஜனாதிபதியாகவும் டாக்டர் ஸாகீர் ஹுசெயினின் மறைவுக்குப் பின் தற்காலிக ஜனாதிபதியாகவும் பதவி வகித்துவந்த திரு. கிரியை விடுத்து திரு. சஞ்சீவரெட்டியை ஜனாதிபதி பதவிக்கு தங்கள் அபேட்சகராக நிறுத்துவதென காங்கிரஸில் ஒரு சாரார் தீர்மானித்தனர். திரு. கிரியையே காங்கிரஸின் அபேட்சகராக நிறுத்த வேண்டுமென பிரதமர் உட்பட காங்கிரஸிலுள்ளோர் விடுத்த கோரிக்கை "சிண்டிகேட்" எனப்படும் வலதுசாரிப் போக்குடைய பஞ்சவர்களின் காதில் விழவில்லை. ஆனாலும் அவர்களின் தீர்மானத்தைப் பிரதமர் ஏற்றுக்கொண்டார் இதன் பின்னரும் திரு. சஞ்சீவரெட்டிக்கே வாக்களிக்க வேண்டுமென காங்கிரஸார் எல்லோ

விளக்கம் கேட்பதும் விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென பிரதமர் இந்திரா தெரிவித்ததுடன் 'கட்சியின் நலனை விட நாட்டின் நலனே பெரிது' என்றும் எடுத்துக் காட்டியிருந்தார். இதை இந்திய மக்களின் பிரதிநிதிகள் திரு, கிரியை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்ததன் மூலம் சரியாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

தேர்தல் முடிந்துவிட்டதால் ஜனநாயக அமைப்பை பின்பற்றும் எந்தநாட்டிலும் தலைவர்களுக்கிடையில் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை எற்படுவதுபோன்று இந்தியாவிலும் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படலாம். ஒற்றுமை எற்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் ஒரு கட்சியின் மதிப்பையோ, தனிப்பட்டவரின் செல்வாக்கையோ பொறுத்தவிஷயமல்ல நாட்டைப் பொறுத்த விஷயம். இந்தியா சுதந்திரமடைந்து இருபத்திரண்டு ஆண்டுகளாகப் பின்பற்றிவந்த பொருளாதாரக் கொள்கை அங்கு பசியையும் பட்டினியையும் ஒழிக்கவில்லையென்பதால் புதிய பொருளாதாரத் ட்டமொன்றை பிரதமர் இந்திராகொண்டுவந்ததும் அதற்கு ஒரு பலப்பரீட்சையாக ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகரை நிறுத்துவதில் காங்கிரஸில் போட்டியேற்பட்டதும் உலகறிந்த விஷயம். திரு. கிரி வெற்றியீட்டியிருப்பதால் திருமதி இந்திராவின் பொருளாதாரத் திட்டத்துக்கு அங்கீகாரம் கிடைத்ததாக இத்தேர்தல் முடிவைக்கொண்டு கருத இடமிருக்கிறது.

மக்களைப் பொறுத்தவரையில் கட்சியின் செல்வாக்கைப் பற்றியோ தனிப்பட்டவரின் கௌரவத்தைப்பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. பசியும் பட்டினியுமின்றி வாழ முடியுமா என்பதுதான் அவர்களின்கவலை. இதற்கு இந்திய மக்கள் சரியான பதிலளித்துவிட்டார்கள்.

நமது இலங்கையைப்

## ஜே. பி. க்கள் பற்றி புகார் கூறப்படுகிறதாம்

### பாராட்டு விழாவில் எஸ். ஜே. வி.

மல்லாகம், வியாழன்

"நமது நாட்டை அந்நியர் ஆட்சிசெய்த காலங்களில் ஆட்சியாளருக்குச் சார்பான சிலருக்கும் கௌரவப்பட்டங்கள் அளித்துப் பிரதி உபகாரம் வழங்கப்பட்டது, நாடு சுதந்திரம் பெற்றபின் இந்நிலை மாறி மக்களுக்குச் சேவை, தொண்டு, பணிபுரிவோருக்கு மேலும் ஊக்கப்படுத்த தற்போது கௌரவப்பட்டங்கள் வழங்கப்படுகின்றன. பல்வேறுதுறைகளிலும் மக்களுக்கு நெருக்கடிகள் அதிகரித்துள்ள இவ்வேளையில் கௌரவப்பட்டம் பெற்ற பெரியார்கள மக்களின் கஷ்டங்களைப் போக்க உதவவேண்டும்."

சமாதான நீதிபதியாக நியமனம் பெற்ற திரு. தா. இளையதம்பிக்கு குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க திறந்த வெளியரங்கில் பொதுமக்கள சார்பில் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வலி வடக்கு காரியாதிகாரி திரு. பி எல். பற்றிக் தலைமையில் நடைபெற்ற

இவ்விழாவில் காங்கேசன்துறை எம். பி. திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம் கலந்துகொண்டு பேசியதாவது

"தற்போது: சில பகுதிகளிலிருந்து சமாதானநீதிபதிகள சிலர் குறித்துப் புகார்கள தெரிவிக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்டோருக்கு பாரபட்சம் காட்டிப் பாகுபாடு செய்வதாக அறிவிக்கப்படுகின்றது. இதனால் சாதி. மத அடிப்படையில் ஜே. பி, நியமனம் கோரப்படுகின்றது. மக்கள சேவைக்கு வழங்கப்படும் கௌரப்பட்டம்பெறுவோர் நல்ல மனப்பான்மையுடன் சகலருக்கும் ஒரேவித கடமையாற்றவேண்டும்."

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உடுவில் எம். பி திரு. வி தருமலிங்கம். மயிலிட்டி கி. ச. தலைவர் வ. கிருஷ்ணசாமி, கவிஞர் வீ. கந்தவனம், பண்டிதர் வ. நடராசா, திரு, க, அருணாசலம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்:

திரு க இளையதம்பி காங்கேசன்துறை எம் பி சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.



## ஆசிரியருக்கு கடிதங்கள்

### கோரக்கர் சித்தர் பற்றிய தகவல் தெரியவில்லை

பதினெண் சித்தர்களுள் ஒருவராகிய 'கோரக்கர்' என்பவர் திருக்கோணமலையில் முத்தியடைந்தாரெனச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கேற்ற ஆதாரங்கள் ஏதாவது திருக்கோணமலையிலோ அதன் சுற்றுடலிலோ உண்டா என்பதைக் குறித்து யாராவது தக்க ஆதாரங்களுடன் தெரியப்படுத்தினால் மிக்க உதவியாயிருக்கும்.

திருமதி ந. மகேஸ்வரிதேவி
'சாந்திநிகேதன்',
பீ. ஏ. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை.

0 0

### முதலியார் மறுப்பு

### 'இளைஞர்களை குறை கூறுதீர்'

மல்லாகம், வியா

'இன்று இளைஞர்கள், மாணவர்களிடையே ஒழுங்கீனம் நிலவுவதாக பெற்றோரும் ஆசிரியரும் குறை கூறுகின்றனர். இளைஞர்களை எந்த நேரமும் குறைகூறிக் கொண்டு நிற்கும் நாம் இளைஞர்களின் ஓய்வு நேரங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட ஏற்ற வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுகின்றோம். பெரியவர்கள் சமூகத்தில் இளைஞர்களுக்குத் தகுந்த கௌரவம், [illegible] வழங்கி நா[illegible] எதிர் காலச் சந்ததியினரை நற்

## யாழ்ப்பாணத்தில் கிரி

இந்தியக் குடியரசின் தூதராக இலங்கையில் இருந்தபொழுது 1950-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சில நிகழ்ச்சிகளில் இப்போது இந்தியக் குடியரசின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள வி. வி. கிரி அவர்கள் கலந்து கொண்டார்.

மகாத்மாவின் பாதையில் சென்று மாண்புற்ற கிரி அவர்கள் காந்தீய வழியினின்று என்றுமே விலகியது கிடையாது பருத்தித்துறையில் 1950ம் ஆண்டு காலஞ்சென்ற புறக்டர் திரு. கே. சி. பாலச்சந்திரன் அவர்கள் முயற்சியால் அண்ணல் காந்திஜிக்கு ஒரு சிலையை பருத்தித்துறைநகரின் சந்தைச் சதுக்கத்தில் நிறுவ முடிந்தது. இந்தச் சிலையைக் காந்தீயவாதியான திரு. வி. வி. கிரி அவர்கள் திறந்துவைத்தார். இது பருத்தித்துறை வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் - பிரமாண்டமான பொதுக்கூட்டம் அன்று நகரில் நடந்தது.

காந்திஜியின் நூற்றாண்டுவிழா நடைபெறும் இவ்வாண்டு திரு. கிரி அவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒரு பொருத்தமாக அமைந்துள்ளது.

## ஒரேநாளில் 14 கிணறுகளும் ஒரு கேணியும் சுத்தஞ் செய்தனர்

### புங்குடுதீவில் சிரமதானிகள் சாதனை

புங்குடுதீவு, வியாழன்

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சிரமதான வேலைக் குழுவினர் தமது முதல் வேலையைப் புங்குடுதீவு கிழக்கு தெங்கந்திடல் பிள்ளையார் கோவில் முன்றலில் உள்ள திருக்குளத்தைச் சுத்தஞ்செய்வதுடன் ஆரம்பித்தனர். ஏறக்குறைய 41 சிரமதானத் தொண்டர்கள் முதல் நாள் வேலையில் ஈடுபட்டனர். பல காலமாகச் சுத்தஞ் செய்யப்படாமற் கிடந்த பல கிணறுகளை இக்குழுவினர் சுத்தஞ்செய்தனர். அன்று மாத்திரமே 14 கிணறுகளும் ஒரு கேணியும் சுத்தஞ்செய்து மிகப் பெரிய சாதனையை நிலைநாட்டினர்.

மறுநாள் 12ம் வட்டாரத்திலுள்ள தல்லையபற்று முருகமூர்த்தி ஆலய முன்றலிலுள்ள திருக்கிணற்றைச் சுத்தஞ்செய்ய ஆரம்பித்த சிரமதானத் தொண்டர்கள் பல காலமாகத் தூர்ந்து போய்க்கிடந்த 6 கிணறுகளில் சிலவற்றைத் தோண்டி, ஆழமாகப் பதித்துப், நீர் இறைத்தும் சுத்தஞ்செய்தனர். தொடர்ந்தும் இக்குழுவினர் பல வேலைகளைச் சிரமாதான முறையில் செய்துவருகின்றனர்.

—

### நெசவுநிலைய உபசபை

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு கிராமமுன்னேற்றச்சங்க கூட்டம் திரு. ஜ. நடராசா தலைமையில் நடைபெற்றபோது நெசவுநிலையம் அமைப்பதுசம்பந்தமாக பேசப்பட்டது. தற்போது வழங்கப் ட்டுள்ள

### தற்கொலை

புலோலி, வியா.

கரவெட்டி கிழக்கைச்சேர்ந்த சின்னத்தம்பி வேலாயுதம் (வயது 37) என்பவர் தமக்குச் சொந்தமான கடையினுள் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இறந்தவரின் மைத்துனரான கணபதிப்பிள்ளை கந்தையா (வயது 40) என்பவர் மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில் இறந்தவர் இருதடவைகள் விவாகம் செய்தாரென்றும் அதனால் இவருக்கு 3 குழந்தைகள் பிறந்து இறந்தன வென்றும் இரு மனைவிமாரும் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார். 8 வருடங்களுக்கு முன்னர் நடந்த இச்சம்பவங்களைத் தொடர்ந்து அவர் தற்கொலை செய்யப் போவதாகக் கூறிவந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்,

— —

### முத்தமிழ் வளர்க்க...

அல்லைப்பிட்டி, வியாழன்

"இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை அழிய விடாதுபோற்றிக்காப்பாற்றுவது தமிழ் இளைஞர்களின் கடமையாகும். பண்டைய கலைகளின் பெருமைகளைத் திரும்பவும் அதே நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் சிறந்தபல கலைஞர்களை உருவாக்கவேண்டும். அதன் மூலமே முத்தமிழின் சுவையை நாடறியச் செய்ய

## நாட்டிலும் நகரிலும்

'அளவையூர் சஞ்சீவி' என்றழைக்கப்படும் அளவெட்டி சி. விநாசித்தம்பி ஆசிரியர் இனிமேல் விநாசித்தம்பி புலவராகிவிட்டார். செல்வச்சந்நிதிக் கந்தன் பரம்பரைப் பூசகர் ஸ்ரீ மா. க. ஆறுமுகசாமிஐயர் இந்த 'புலவர்' பட்டத்தை அவருக்கு வழங்கியுள்ளார்.

திரு. விநாசித்தம்பி செல்வச்சந்நிதியில் சென்ற 13-ந் திகதி கொடியேற்ற விழாவுடன் தொடங்கி வருகிற 25-ந் திகதி சப்பறத்திருவிழா வரையும் 'செல்வக் கந்தன் திருவிளையாடல்' என்ற பொருள் பற்றி தினமும் இரவு திருவிழா முடிந்த பின்னர் கதாப்பிரசங்கம் செய்து வருகிறார். அவருக்கு பக்கவாத்தியங்களாக திருவாளர்கள் வைத்தீஸ்வர ஐயர் (வயலின்), எம். என். செல்லத்துரை (மிருதங்கம்), வை. நாகேந்திரசர்மா (டோலக்), குமுக்கா கணபதியாபிள்ளை கஞ்சிரா) அனுசரிக்கிறார்கள்.

இது மட்டுமன்று, திரு விநாசித்தம்பி ஒரு நீண்ட நாள் விரதத்தை நிறைவேற்றி 'ஸ்ரீ செல்வச்சந்நிதித் திருத்தல புராணச் சுருக்கம்' என்று ஒரு கவித்திரட்டையும் எழுதியுள்ளார். இந்நூல் ஆறும் திருவிழாவன்று வெளியிடப்பட்டபொழுதே அவருக்கு 'புலவர்' பட்டம் வழங்கப்பட்டது. வல்வெட்டித்துறை சுப்பிரமணியம் சோடாக் கொம்பனியார் வெளியிட்டுள்ள இந்நூல் விற்பனையால் வரும் பணம் செல்வச்சந்நிதி ஸ்ரீ முருகன் அன்னதானச்சபைக்குச் சேருமாம்.

விநாசித்தம்பி புலவர் அவர்கள் பல வருடங்களாக சங்கீத கதாகாலக்ஷேபம் செய்து வருகிறார். அவருடைய இசைத் திறமையும், இயற்புலமையும் பொதுமக்களை வசீகரிக்கும் தன்மை வாய்ந்தன. ஒரே இரவில் இரண்டு மூன்று கோவில்களில் கதாப்பிரசங்கம் செய்து சில காலம் தொண்டை கட்டிப் போயுமிருந்தார்! இது பொதுமக்களிடையே அவருக்குள்ள கிராக்கியை காண்பிக்கிறது.

திருக்கோவில்களில் சதுர்க்கச்சேரி நாடகம், வாணவேடிக்கை முதலிய களியாட்டங்களை விடுத்து சங்கீத கதாப்பிரசங்கங்கள் நடைபெறுவது மிகவும் விரும்பத்தக்கதொரு முன்னேற்றம் சாதாரணமாக சமய சொற்பொழிவுகளைக் கேட்டு அலுப்புத் தட்டுபவர்களுக்கு இசையுடன் கூடிய கதை மகிழ்ச்சியை கொடுக்கிறது. தேனில் கலந்து மருந்து கொடுப்பது போல, இது மக்களுக்கு செவிக்குணவுடன் ஆத்மீகப் பசியையும் ஆற்றும்.

விநாசித்தம்பிப் புலவர் மேலும் பல்லாண்டுகள் கதாகாலக்ஷேபம் செய்து மக்களை மகிழ்விக்க வேண்டுமென்று செல்வச்சந்நிதியானை பலரும் வேண்டிக் கொள்வார்கள்.

கதிர்காமம் ஒரு பழமுதிர் சோலை என்றால், நல்லூர் ஒரு கந்தகோட்டம் என்றால், மாவிட்டபுரம் ஒரு திருப்பரங்குன்றம் என்றால் செல்வச்சந்நிதி கடற்கரையோரமாக விளங்கும் ஒரு திருச்செந்தூர் என்று கூறலாம். செல்வச்சந்நிதியானின் அற்புதங்கள் அளப்பில. தினமும் அங்கு போய்க் குவியும் சனத்திரள்களையும் பார்த்தால் அவருடைய மகிமை விளங்கும். அவர் பெயரில் அன்னதானம் செய்பவர்களுக்கு, விநாசித்தம்பிப் புலவரைப் போல, ஆத்மதானம் செய்பவர்களும் நிச்சயமாக அவருடைய கடைக்கணிப்புக்கு இலக்காகுவார்கள் என்று திடமாகக் கூறலாம்.

— வழிப்போக்கன்

### உற்சவம் மீண்டும்

## பொக்கிள் கொடியை கத்தியால் வெட்டினார்

### குழந்தை மரணம்

புலோலி, வெள்ளி

கரணவாய் வடக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பெண் யோகம்மாவின் ஆறு மாதக் குழந்தையின் பொக்கிள் கொடியை 'சத்தகக் கத்தி'யால் அறுத்ததினால் குழந்தை மரணமானது. மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நடந்த இம்மரணம் சம்பந்தமாக சாட்சியமளித்த டாக்டர். திரு. ராசசுந்தரம் சுரேந்திரகுமார் சத்தகக் கத்தியால் பொக்கிள் கொடி அறுத்ததால் ஏற்பட்ட வலியினால் குழந்தை இறந்துள்ளதாகக் கூறினார். மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ் இராமநாதன் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

— —

## கிணறு கஷ்டம் தீர்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் வலதுசாரிப் போக்குடைய பஞ்சவர்களின் காதில் விழவில்லை. ஆனாலும் அவர்களின் தீர்மானத்தைப் பிரதமர் ஏற்றுக் கொண்டார் இதன் பின்னரும் திரு. சஞ்சீவரெட்டிக்கே வாக்களிக்க வேண்டுமென காங்கிரஸார் எல்லோரையும் வற்புறுத்தவேண்டுமென்று பிரதமரை நிர்ப்பந்திக்க முனைந்த காங்கிரஸ் அக்ராசனரும் பஞ்சவரும் முனைந்ததுடன் பிரதமரை மிரட்டியும் அவரைப் பதவியிலிருந்து விரட்டவும் முயற்சிகள் செய்யப்பட்டன. இச் சமயத்தில்தான் பிரதமர் இந்திரா விழிப்படைந்தார். இது காங்கிரஸிலுள்ள வலதுசாரிப் போக்குடையவர்களுக்கும் இடதுசாரிப் போக்குடையவர்களுக்கும் பலப்பரீட்சையாக மாறியது.

கட்சி தெரிவுசெய்த அபேட்சகரை ஆதரிக்காத காங்கிரஸார்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படுமென்று காங்கிரஸ் அக்ராசனர் கூறியதுடன் பிரதமர் உட்பட அமைச்சர் சிலரிடம் அவர்களது நடவடிக்கை பற்றி விளக்கமும் கேட்டிருந்தார். ஒழுங்கு நடவடிக்கைகளும் வரின் கௌரவத்தைப்பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. பசியும் பட்டினியுமின்றி வாழ முடியுமா என்பதுதான் அவர்களின்கவலை. இதற்கு இந்திய மக்கள் சரியான பதிலளித்துவிட்டார்கள்.

நமது இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவில் நடந்து முடிந்த ஜனதிபதி தேர்தலும் அதன் அடிப்படையிலமைந்த அரசியல் போட்டியும் அடுத்த பொதுத் தேர்தலில் இங்கு தாக்கம் ஏற்படுத்தக் கூடும். இதைத் தத்தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தவும் பலர்முனைவர்

ஆனால் கட்சிதான் பெரிது என்பதை மறந்து நாடுதான் பெரிது நாட்டு மக்களின் முன்னேற்றம்தான் மற்றெல்லாவற்றையும் விட முக்கியம் வாய்ந்தது என்பதை இங்குள்ள தலைவர்களை உணரவைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்நாட்டு 'மன்னர்'களான வாக்காளருடையது அடுத்த பொதுத் தேர்தல் இதற்கு விடையளிக்குமா?

## வெற்றி விநாயகர்

பருத்தித்துறை, வியா.

பரந்தன் ரசாயனத்தொழிற்சாலை ஊழியர்கள் தொழிற்சாலைக்கு அணித்தாயுள்ள அரை ஏக்கர் நிலத்தில் 'வெற்றி விநாயகர்' என்ற பெயரில் ஒரு ஆலயத்தை நிறுவியுள்ளனர். இந்நிலத்தைக் கோவிலுக்குச் சொந்தமாக்கித்தருமாறு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தையும் கிளிநொச்சிக் காரியாதிகாரியையும் இவர்கள் கேட்டுள்ளனர்.

## இடிக்கு இரு சிறுவர் பலி

திருக்கேதீச்சரம், வியா

மழை பெய்ததைத் தொடர்ந்து வந்த இடிக்கு இரண்டு சிறுவர்கள் பலியானார்கள். இச் சம்பவம் திருக்கேதீச்சரத்தில் நடந்தது.

7 வயதும், 6 வயதுமுள்ள இரு சிறுவர்கள் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது இடி விழுந்ததாகவும், உடனே சிறுவர் நிலத்தில் வீழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

மரணவிசாரணை அதிகாரி விபத்துமரணமெனத் தீர்ப்பளித்தார்.

## "மெய்ஞ்ஞானத்தை மறக்கக் கூடாது"

வல்வெட்டித்துறை, வியா.

இன்றைய விஞ்ஞானத்தை வியக்கும் போது மெய்ஞ்ஞானத்தின் அருமையையும் யாம் மறந்து விடக்கூடாது என பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலையத்தைச்சேர்ந்த திரு. இரத்தினசபாபதி பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி கோவில் ஆடிப்பூரத் திருவிழாவின் போது உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## அராலிக்கு முதலிடம்

அராலி, வியாழன்

வலிமேற்கு விளையாட்டுக் கழகம் 2 நடத்திய சைக்கிள் போட்டியில் கலந்து கொண்ட அராலி சரஸ்வதி சனசமூக நிலையத்தைச்சேர்ந்த செல்வன் சுந்தரேஸ்வரன் ஆண்கள் போட்டியில் முதலிடத்தையும், அராலி தெற்குகரைப்பிட்டி சனசமூகநிலையத்தைச்சேர்ந்த செல்வி எம். பத்மாவதி பெண்களுக்கான ஓட்டத்தில் முதலிடத்தையும் பெற்றனர். கழகத்தின் மற்றப்போட்டிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ந் தி ... வெளியிடப்பட்டது.

திருமதி ந.மகேஸ்வரிதேவி
'சாந்திநிகேதன்',
பீ. ஏ. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை.

## முதலியார் மறுப்பு

உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தர்மலிங்கம் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது மக்கள் பிரதிநிதிகள் சபையில் பேசுகையில் யான் யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினராக இருந்த காலத்தில் திருகோமலையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு பிரேரணை சமர்ப்பித்ததாக குறிப்பிட்டாரென பத்திரிகை வாயிலாக அறிந்தேன்.

திரு. தர்மலிங்கம் கூறியதில் ஒரளவேனும் உண்மையில்லை. யான் யாழ்ப்பாண மாநகர சபையில் உறுப்பினராக இருந்த காலத்தில் தமிழ்பல்கலைக்கழக இயக்கமோ திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென்ற ஆலோசனையோ உருவாக இல்லை அத்தோடு நீண்ட காலமாக இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஓர் நிறைவுள்ள பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்றும் அப்பல்கலைக்கழகம் ஈழத்தமிழ் மக்களின் தலைநகரமான யாழ்ப்பாணத்திலேயே அமைய வேண்டுமென்றும், தமிழ் முன்னோர்கள் சைவ அபிமானிகள் விட்டுச் சென்ற ஏராளமான பெறுமதியான தர்மச் சொத்துக்கள் யாவும் இப்பல்கலைக்கழகத்திற்கு உபயோகப் படுத்தப்பட வெண்டுமென்றும் எனது மனதில் திடகாத்திரமான கொள்கை குடிகொண்டிருந்ததென்பதை தெளிவு படுத்த விரும்புகிறேன்.

அக்கொள்கை இப்போது பன்படங்கு உறுதியாகி இருக்கிறதென்பதை இந்த வேளையில் தெரிவிக்கிறேன்.

முதலியார்
செ. முத்துத்தம்பி

## வல்லிபுர ஆலய உற்சவம்

புலோலி, வியாழன்

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் வருகிறமாதம் 10-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 26-ம் திகதி வரை நிழும் வழமைபோல் தொண்டர்படை நிறுவப்படவிருக்கிறது. விசேஷ பஸ் சேவையும் இடம் பெறும்.

சிறந்த முறையில் பயன் படுத்தப்பட ஏற்ற வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுகின்றோம். பெரியவர்கள் சமூகத்தில் இளைஞர்களுக்குத் தகுந்த கௌரவம், மரியாதை வழங்கி நாட்டின் எதிர்காலச் சந்ததியினரை நற்பிரஜைகளாக உருவாக்குதல் அவசியம் நாட்டின் வழிகாட்டிகளாக அமைப்பவர்கள் இளைஞர்களே.'

மயிலிட்டி கிராமசபை பகுதி சனசமூக நிலையங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும் போது பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக உபஅதிபர் திரு. கே. சிவபாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்டுவன் ஞானோதயா வித்தியாசாலை மண்டபத்தில் மயிலிட்டி கி. ச. தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம், ஆர். பரராஜசிங்கம், காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக் ஆகியோரும் பேசினர்.

பின்வருவோர் சமாஜ நிர்வாகசபையினராக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்- திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் எம். பி., திரு கே சிவபாலன், பண்டிதர் இ. நமசிவாயம்.

தலைவர்- திரு. வ. கிருஷ்ணசாமி, உபதலைவர்கள்- திரு. சி. சிவநாதம்பிள்ளை. திரு. எஸ். தாமோதரம்பிள்ளை, காரியதரிசி திரு. ரி. செல்லத்துரை, உபகாரியதரிசி திரு. கே. நாகலிங்கம், தனாதிகாரி- திரு. கே ரி. இராசதுரை.

## மாதர் சங்கத்துக்கு பாராட்டு

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு மாதர் முன்னேற்றச் சங்க கூட்டம் தலைவர் திருமதி விமலா துரைராசா தலைமையில் நடைபெற்றது. சமூக சேவைப் பகுதிஉத்தியோகத்தர் திரு. ஜோசெப்பும் இதில் கலந்து கொண்டார்.

அரசாங்க உதவி பெறுமலேயே ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் இப்பகுதியில் நல்ல சேவைகளைச் செய்திருப்பதாகக் கூறிய திரு ஜோசெப் இதில் கூடியகவனமெடுத்து உழைத்த தலைவரையும், சங்கஉத்தியோகத்தர்களையும் பாராட்டினார்.

சங்கத்தைப் பதிவு செய்வதற்கும் மற்றும் நிதிஉதவி பெற்றுத் தருவதற்கும் ஆவன செய்வதாக அவர் உறுதியளித்தார்.

## உபசபை

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு கிராமமுன்னேற்றச்சங்க கூட்டம் திரு. ஐ. நடராசா தலைமையில் நடைபெற்றபோது நெசவு நிலையம் அமைப்பதுசம்பந்தமாக பேசப்பட்டது. தற்போது வழங்கப் ட்டுள்ள நிதியுடன் மேலும் நிதிஉதவி பெற்றுத்தருவதாக சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் திரு. ஜோசேப் உறுதியளித்தார்.

பொதுமக்களிடம் நிதி திரட்டுவதற்கென உபசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. அதில் திரு. பொ. துரைராசா, திரு. சு. தயாபரராசா, திரு. ஐ. நடராசா, திருமதி சிவம், செல்வி மனோன்மணி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உள்ளூர் ஆசிரியர்களை நியமிப்பதற்கு வசதியிருக்கக் கூடியதாக, வெளியூர் ஆசிரியர்களை நெசவுசாலையில் நியமிப்பதினாலேயே அது சரியாக இயங்கமுடியாதிருப்பதாகவும், உள்ளூர் ஆசிரியர்களை நியமிக்க கி. மு. ச நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தலைவர் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

## விஞ்ஞான ஆசிரியர் தட்டுப்பாடு

புலோலி, வியா.

வடமராட்சிப் பகுதியில் உள்ள புற்றளை மகாவித்தியாலயம் புலோலி அமெரிக்கன் மிஷன் பாடசாலை போன்ற சில பாடசாலைகளிலும் விஞ்ஞான பாடங்களை பயிற்றுவிப்பதற்கு தகுதியுடைய ஆசிரியர்கள் இல்லாமல்இருப்பதாக புகார் கூறப்படுகிறது. இத்த தட்டுப்பாட்டை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி வடமராட்சிமக்கள் வடபகுதி கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

## பர்மிட்டுகள் நிறுத்தப்படும்

கோட்டை, வியாழன்

நான்கு சில்லு டிராக்டர்களை வாங்குவதற்கு விவசாயிகளுக்கு பர்மிட்டுகள் வழங்குவதை நிறுத்தும்படி அரசாங்க அதிபர்களுக்கு விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கும் மேலான 'பர்மிட்'டுகளுக்கு இன்னும் டிராக்டர்கள் வழங்கிமுடியவில்லை யென அமைச்சு இந்த அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பியுள்ள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது.

வது தமிழ் இளைஞர்களின் கடமையாகும். பண்டைய கலைகளின் பெருமைகளைத் திரும்பவும் அதே நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் சிறந்தபல கலைஞர்களை உருவாக்கவேண்டும். அதன் மூலமே முத்தமிழின் சுவையை நாடறியச் செய்ய முடியும்'' என வேலணை கிழக்கு கிராமசேவையாளர் திரு. த. வடிவேலு வேலணை வங்களாவடி முருகன் கோவில்முன் நடைபெற்ற வேலணை கலாமன்றக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

## தீவிபத்து 250 வீடுகள் நாசம்

சென்னை, ஆக. 21

சென்னை தேனாம்பேட்டையில் திடீரென நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் 250 வீடுகள் தீக்கிரையாகின இதில் ஒரு தாயும் குழந்தையும் கருகி மாண்டுவிட்டதாக கூறப்பட்டது.

ஒரு குடிசையில் பிடித்த தீ காற்றின் வேகத்தால் வேகமாகப் பரவியது. அந்தப்பகுதியிலுள்ள குடிசைகளை தீ சூழ்ந்துகொண்டது இதனால் எங்கும் புகைமண்டலமாகக்காட்சி அளித்தது. இவ்வாறு தீ விபத்துப் பற்றி அறிவிக்கப்பட்டது

தீ அணைக்கும் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

4 மணி நேரம் போராடி தீயை அணைத்து முடித்தார்கள்.

இந்தத் தீவிபத்தில் 250 குடிசைகளுக்கு மேல் எரிந்து சாம்பலாகிவிட்டன. 600க்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2,000 பேர் வீடு இழந்தார்கள்.

## சிற்பக்கல் காணப்படடது

விஸ்வமடு, வியாழன்

விஸ்வமடு காணி ஒன்றில் புராதன சிற்பக்கல் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. 6 அடி நீளமும் ஒன்றரை அடி அகலமும் கொண்ட இச்சிற்பக் கல்லில், ஒரு பக்கத்தில் காகம் வடை ஒன்றைக் கீழே போடுவதைப் போலவும், நரி ஒன்று அதை ஏந்துவது போலவும் செதுக்கப்பட்டுள்ளது.

கிணறு ஒன்றைத் தோண்டும் போது விவசாயியான நாகராஜா என்பவரது வளவில் கண்டெடுக்கப் பட்ட இச் சிற்பத்தை வைத்து அவர் கோயில்கட்டப்போவதாகத் தெரிவித்தார்.

திருக்கோவில்களில் சதுர்க் கச்சேரி நாடகம், வாண வேடிக்கை முதலிய களியாட்டங்களை விடுத்து சங்கீத கதாப்பிரசங்கங்கள் நடைபெறுவது மிகவும் விரும்பத்தக்கதொரு முன்

## உற்சவம் மீண்டும் ஆரம்பம்

அளவெட்டி, வியாழன்

சிலவருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, தையிட்டி கலையவிற் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இவ்வருடம் ஆரம்பமாகி யுள்ளது. ஆலயப் பிரவேச பிரச்னை உட்படப் பல பிரச்சனைகளை முன்னிட்டு உற்சவத்தை நிறுத்தி வைத்திருப்பது கிராமத்துக்கு தீங்கானது எனக்கருதியே ஆலய தர்ம கர்த்தா இம்முறை உற்சவம் நாடாத்த முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. உற்சவம்தற்போது நடைபெற்று வருகிறது.

## போராடடத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசுக்கு உள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட்டு மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் எந்த அளவில் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்பது பற்றி யோசனை கூறி அறிக்கை கொடுப்பார்கள்.

இந்த அறிக்கை வந்ததும் எதிர்க்கட்சித் தலைவர்களிடமும், மற்ற மாநில அரசுகளுடனும் அதற்கு ஆதரவு திரட்டிக்கொண்டு, இந்த அரசு மத்திய அரசிடம் வாதிடும் அப்படி வாதிட்டும் பயன் இல்லையென்றால் இந்த அரசு மத்திய அரசுடன் போராடும் என்றும் ம.பொ. சி. யிடம் நான் கூறினேன்.

அவர் போராட்டத்திற்கு அடையாளமாகமட்டும் ஒரு நாள் நடத்தப் போவதாக கூறி இருக்கிறார்.

அப்படியே ம பொ சி அறிவித்து இருந்தாலும் அந்த போராட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

## நீர்ப்பாய்ச்சலுக்கு உதவும்

பண்டத்தரிப்பு, வியாழன்

சித்திரமேழிவயலை அடுத்த வட்டவெளிக் குளத்திலே இரு புதிய கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. குளத்தில் நீர் வற்றியிருக்கும் காலத்தில் இக்கிணறுகள் மூலம் நீர்ப்பாய்ச்சி உப உணவுப் பயிர்கள் செய்வதற்கு இவை வாய்ப்பாக அமைந்துள்ளன,

ரணை அதிகாரி திரு. ஆர். எஸ் இராமநாதன் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## கிணறு கஷ்டம் தீர்ந்தது

உடுப்பிட்டி வியாழன்

குடிதண்ணீர்க் கிணறு இலாக் குறையை கரவெட்டி மேற்குச் சிறுபான்மை வகுப்பினர் சிரமதானம் மூலம் தீர்த்துள்ளனர். கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலைய இளைஞர் மன்றத்தினரின் முயற்சியினால் சிரமதானமூலம் குடிதண்ணீர் கிணறு ஒன்று தோண்டப்பட்டுள்ளது.

## குழாய்நீர் திட்டம்

அராலி, வியாழன்

அராலி தெற்கு, கிழக்கு, மேற்கு குழாய்நீர் விநியோகத்திற்கு நடப்புவருட நிதித் திட்டத்தில் கிணறு தோண்டல், நீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல் போன்ற ஆரம்பவேலைகளுக்கு ரூபா 40,000/- ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## கேள்வி விளம்பரம்

**கிராமசபை புங்குடுதீவு**

**1 பிள்ளையார் கோவில் றேட்**

புங்குடுதீவு கிராமசபை அக்கிராசனர் அவர்களால் 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி வியாழக்கிழமைகாலை 9-30 மணிவரை டி வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து ''சீல்'' வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 35/- (முப்பத்தைந்து) கட்டி 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் புங்குடுதீவு கிராமசபையில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்துக்குக் கட்டிய பணத்தில் ரூபா 5/- (ஐந்து) திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. மேலும் விபரங்களை புங்குடுதீவு கிராமசபை அலுவலகத்திலும், உள்ளூராட்சி உதவி அதிபர், யாழ்ப்பாணம் அவர்கள் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்

**கா. மதியாபரணம்**
**அக்கிராசனர்.**

கிராமசபை அலுவலகம்
புங்குடுதீவு
19-8-69. 1714

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org